Registered as a Newspaper

குறுகிய காலத்தில் மக்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்ற ஒரே ஜவுளி நிறுவனம்
இளவரசி
S12, நவீன சந்தை, சுன்னுகம்.

# சஞ்சீவி

விலை ரூ. 2/-

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

பெண்மணிகளுக்கும் சிறுவர் சிறுமியருக்கும் ஏற்ற இறக்குமதி செய்யப்பட்ட நவீன புடவை தினுசுகளுக்கும் றெடிமேட் ஆடைகளுக்கும் புகழ் பெற்றவர்கள்
இளவரசி
S12, நவீன சந்தை, சுன்னுகம்.

மலை:- 2 யாழ்ப்பாணம் பிரபவ ஹு ஆடி மீ 30 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 19 (15-08 1987) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:-31

# தமிழ் மாநிலம் அமைந்த பின்பே இந்திய புனர்நிர்மாண உதவி

## அதற்கு முதல் வழங்கும் எண்ணம் இல்லையாம்

கொழும்பு, ஆகஸ்ட் 15

இலங்கைத் தமிழரின் புனர்வாழ்வு, பாதிக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளை புனர்நிர்மாணம் செய்தல் ஆகியவற்றுக்கான இந்திய அரசாங்கத்தின் நிதி உதவி, வடக்கு-கிழக்கு மாநில சபை இயங்கத் தொடங்கிய பின்னரே வழங்கப்படும் என்று தெரியவருகின்றது

அதற்கு முன்னர் இந்திய நிதி உதவி வழங்கப்படக் கூடிய வாய்ப்பு எதுவும் இல்லை என்றும் தெரியவருகிறது.

தமிழர் புனர் வாழ்வு, தமிழ்ப் பிரதேசப் புனர் நிர்மாணம் ஆகியவற்றுக்கு உதவ இந்தியா தயாராக உள்ளது என பதை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் ஊர்ஜிதம் செய்தார்.

புனர்வாழ்வு, புனர் நிர்மாணம் ஆகியவற்றுக்கு இந்தியா உதவ முடிவு செய்திருக்கிறது என்ற செய்தி ஏற்கனவே

(8ஆம் பக்கம் பார்க்க)

## 'மொட்டை' அடிப்பதில் மோகம்

கொழும்பு, ஆக. 15

பௌத்த பிக்குவாக மாற மொட்டை அடித்த மாணவர்கள் சிலர் அனுராதபுரத்தில் கைது செய்யப்பட்டனர்.

ஏனைய இடங்களில் உள்ள பொலிஸாரும் இது பற்றி உஷார்ப்படுத்தப்பட்டுள்ளனர்.

(உ-எ)

## இரண்டரை வீதம் தமிழர்!

கொழும்பு, ஆக. 15

இலங்கைப் பொலிஸ் படைக்கு எத்தனை தமிழர் தேவை என்பது பற்றிய ஆய்வு ஒன்றை பொலிஸ் திணைக்களம் நடத்துகின்றது.

இலங்கைப் பொலிஸ் படையில் 22 ஆயிரம் பேர் தற்சமயம் உள்ளனர்.

இவர்களில் தமிழர் ஆக 540 மட்டுமே - இரண்டரை வீதமே என்று கணக்கிடப்பட்டுள்ளது (உ-எ)

## சுபநேரம்

15-8-1987

சுபநேரம்:-
3.05 முதல் 4 35 வரை
ராகுகாலம்:-
9.05 முதல் 10 35 வரை

இரவுக்கும் பகலுக்கும் இதுபொருந்தும்.

## ஒப்பந்தத்தை அரசு கிழக்கில் முழுதாக மீறுகிறது

### புலிகள் அதிருப்தி சந்தேகம்

யாழ்ப்பாணம், ஆக. 15

ஜே ஆர்.-ராஜீவ் ஒப்பந்தத்தை ஸ்ரீ லங்கா அரசு கிழக்கில் முற்று முழுதாக மீறிவருகிறது. அங்கு இராணுவம் இன்னும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது.

இது குறித்து நாம் ஆழ்ந்த அதிருப்தி அடைந்துள்ளோம்.

ஸ்ரீ லங்கா அரசின் யுத்த நிறுத்தம் குறித்த நிலைமைகளில் பலத்த சந்தேகமும் கொண்டுள்ளோம்.

—இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்—

எமது பிரதித் தலைவர் திரு. மாத்தயா கடந்த 3 தினங்களாக கிழக்கின் நிலைமைகளை அங்கிருந்து அவதானித்து வருகிறார்.

அங்கு ஒருமைல் தூரத்துக்கு ஒரு முகாமாக மொத்தம் 116 இராணுவ முகாம்கள் உள்ளன.

அம்பாறையில் 21. திருமலையில் 25, மூதூரில் 14, தம்பலகாமத்தில்

(8-ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி விபத்திலிருந்து அதிபர் றேகன் மயிரிழையில் தப்பினர்

லொஸ் ஏஞ்சல்ஸ், ஆக. 15

அமெரிக்க அதிபர் றேகன் பயணம் செய்த ஹெலிக்கொப்டருடன் தனியார் விமானம் ஒன்று மோத இருந்தது.

கடைசி நிமிடத்தில் ஹெலிக்கொப்டர் திசை மாறியதால் அதிபர் றேகன் மயிரிழையில் உயிர் தப்பினர்.

இச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

விடுமுறையைக் சழிக்க அதிபர் றேகன் ஹெலிக்கொப்டரில் கலிபோர்னியோவுக்குச் சென்றுகொண்டு இருந்தபோதே இவ்விபத்து ஏற்படவிருந்தது.

தனி என்ஜின் பூட்டப்பட்ட தனியார் விமானம் அதிபர் றேகனின் ஹெலிக்கொப்டர் அருகே நெருங்கியது.

உடனடியாக இராணுவ ஹெலிக்கொப்டர் ஒன்று அந்த விமானத்தைத் துரத்திச் சென்றது.

சுமார் நூறு மைல் தொலைவில் உள்ள விமான நிலையம் ஒன்றில் தரை இறங்கிய அந்த விமானத்தில் பயணம் செய்த இரண்டு பேர் பொலீஸாரினல் பின்னர் கைது செய்யப்பட்டனர்.

(உ-எ)

## ஜே.ஆர்-ராஜீவ்ஒப்பந்தம் வெறும் எலும்புக்கூடு-நீலன்

கொழும்பு ஆக. 15

ஜே. ஆர்-ராஜீவ் ஒப்பந்தம் வெறும் எலும்புக் கூடாகவே உள்ளது. அதற்கு இரத்தமும் தசையும் ஊட்டி நடக்கச் செய்வதற்கு இரு இனங்களின் தரப்புகளிலும் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற உறுதி மிக்க திடசங்கற்பம் தேவை.

இவ்வாறு கூட்டணிப் பிரமுகர் டாக்டர் நீலன் திருச்செல்வம் தெரிவித்தார்.

மிக ஆழமாகப் பதிந்து விட்ட இனப்பிரச்சினை என்ற வடுவை குணமாக்குவதற்கான முதலாவது சிகிச்சை இந்த ஒப்பந்தம் என்று சொல்லலாம்-

பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்படுகிறது என்பது இரு தரப்பினரும் விட்டுக் கொடுத்து ஒரு சாரார் கஷ்டத்தை மறு சாரார் சிரணித்துச் செயற்படுத்துவதிலேயே தங்கி உள்ளது என்றும் திரு. நீலன், ரூபவாஹினிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். (அ)

## 6 பெண்கள் உட்பட விடுதலையான 302 பேர் இன்று வந்து சேருவர்

யாழ்ப்பாணம், ஆக. 15

பூஸா தடுப்பு முகாமில் இருந்து விடுதலை செய்யப்பட்ட 302 தமிழர்கள் இன்று காங்கேசன்துறையை வந்தடைவர்.

இன்று காங்கேசன் துறை வருபவர்களில் 6 பேர் பெண்கள்.

இவர்கள் இந்திய கடற்படையின் யுத்தக் கப்பல்களில் வருகின்றனர்.

கப்பல் இன்று காலை 9 மணியளவில் காங்கேசன் துறைமுகத்தை வந்தடையும். (உ-7)

## போராளி அமைப்புகளைப் பிளவுபடுத்திய 'ரோ' அதிகாரி பதவி நீக்கம்!

### இரகசியத் தகவல்களை வெளியிட்டாராம்

புதுடில்லி, ஆக. 14

இலங்கை இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் பற்றிய இரகசியத் தகவல்களை வெளிநாட்டு ஏஜன்ஸிகளுக்கு வழங்கிய சந்தேகத்தின் பேரில் இந்திய உளவு ஸ்தாபனமான 'ரோ' (Raw) வில் பிரதிப் பொலீஸ்மா அதிபராகப் பணியாற்றிய திரு. கே. பி. உன்னிக்கிருஷ்ணன் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

தமிழ் போராளிகள் இயக்கங்களைப் பிளவுபடுத்தும் நடவடிக்கைகளிலும் இவர் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் கொழும்பு இந்தியத் தூதரகத்திலும் சில காலம் பணியாற்றி இருந்தார்.

1985 ஜூலை ஆகஸ்ட் திம்புப் பேச்சுக்களின் போது இவர் தமிழ்ப் போராளி அமைப்புக்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்.

இணை அமைச்சர் சிதம்பரம் 1986 ஆரம்பத்தில் போராளி அமைப்புகளுடன் நடத்திய பேச்சுக்களின் விவரங்கள் அனைத்தும் இவருக்குத் தெரிந்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடி விபத்து: 3-வது இந்திய வீரரும் நேற்று மரணமானர்!

கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற கண்ணிவெடி விபத்தில் காயமுற்றிருந்த இந்திய இராணுவ லெப்டினன்ட் பங்சஜம்விக்ரம் நேற்று மரணமானார்.

யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு தேறி வந்த இவர் திடீரென நேற்றுப் பிற்பகல் மரணமானர்.

மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த இவரது சடலத்தை அங்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் நேற்றிரவு மேற்கொள்ளப்பட்டன.

காயமடைந்த மற்றொரு வீரரான தயாளனின் நிலையும் கவலைக்கிடமாகவே இருந்து வருகிறது. (உ-7)

## விடைத்தாளுடன் ஓடிய பரீட்சார்த்தி!

யாழ்ப்பாணம், ஆக. 15

ஜி. சி. ஈ உயர்தரப் பரீட்சையின் இரசாயனவியல் பாடத்திற்கான விடைத்தாள் வழங்கப்பட்டதும் ஒரு நபர் விடைத்தாளுடன் மண்டபத்தை விட்டு ஓடிமறைந்தார்

நேற்றுக்காலை யாழ் ஒஸ்மாணியாக் கல்லூரி பரீட்சை மண்டபத்தில் இச் சம்பவம் நடைபெற்றது.

காலை இரசாயனவியல் பாடத்தின் முதலாம் பகுதி விடைத்தாள் சகலபரீட்சார்த்திகளுக்கும் வழங்கப்பட்டதும் மண்டபத்தில் இருந்த ஒருவர் விடைத்தாளுடன் வெளியே ஓடினர்.

வெளியே தயாராக நின்ற ஒரு மோட்டார் சைக்கிளில் இவர் ஓடி மறைந்தார்.

மேற்படி மண்டபம் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான மண்டபம் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-7)

## பண்ருட்டி ராஜீவுடன் பேச்சு

புதுடில்லி, ஆக. 15

தமிழக உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் நேற்று பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் பற்றியே இப்பேச்சுக்கள் அமைந்தன என்று தெரியவந்துள்ளது.

அமைச்சர் இராமச்சந்திரன் முன்னர் இணை அமைச்சர் நட்வர்சிங்கையும் சந்தித்துப் பேசி இருந்தார்.

(உ-எ)

## கருத்துக் கலசம்

மயூரா

### நிர்ப்பந்தம் நிலைக்காது

ஒருவரின் விருப்பம் இன்றி, அவர்மீது மற்றவர் செய்த முடிவைத் திணிப்பது நிர்ப்பந்தமாகும். இது கட்டாயப் படுத்தலும் ஆகும்.

பிரச்சினைக்குரிய விடயங்களில் சில வேளைகளில் கட்டாயப்படுத்தல் இடம்பெறுகிறது அதுவும் நிர்ப்பந்தமே.

பெண் ஒருத்தி விரும்பாத ஆடவனை நிர்ப்பந்தித்துக் கல்யாணம் செய்து வைக்கிறார்கள். பின்னர் அந்தத் திருமணம் பல சங்கடங்களைக் கொண்டு வருகிறது குடும்ப வாழ்க்கை என்ற வண்டில் சறுக்கிப் போகிறது.

அதே போன்று, நிர்ப்பந்தத்தின் பேரில் செயற்படுத்தப்படும் எந்த விடயமும் எப்பவோ ஒரு கட்டத்தில் முறிந்து விடுகிறது அல்லது தோல்வி காண்கிறது.

வயிறு நிறைந்திருக்கும் போது பசி எடுப்பதில்லை. அந்த நிலையில் மேலும் ஏதாவது உணவை உட்கொண்டால், வாந்தி எடுக்க நேரிடும். அது உடலுக்கு ஏற்படுத்தப்படும் நிர்ப்பந்தமே.

உடலுக்கு ஏற்படுத்தப்படும் நிர்ப்பந்தத்தின் விளைவு அதுவானல், மனத்தின் மீது திணிக்கப்படுதல் அல்லது நிர்ப்பந்திக்கப்படுதல் பாரிய விளைவுகளை உருவாக்கும் என்பது தெளிவு.

பிரச்சினைக்கு உரிய விடயங்களில் நிர்ப்பந்திக்கப்படும் மக்களின் மனநிலை பாதிக்கப்படும். அப்போதைக்கு அதனை அவர்கள் தட்டிக் கழிக்க முடியாத நிலை ஏற்பட்டாலும், ஒரு காலகட்டத்தில் நிர்ப்பந்தத்தை உடைத்தெறிய முனைவார்கள்.

நிர்ப்பந்தம் என்பதும் விலங்கிடப்படுவது போன்ற ஒரு செயலே. விலங்கிடப்படுபவன் அதனை உடைத்தெறிந்து விடுதலை பெறவே எப்போதும் முயற்சிப்பான்

அது போலவே, நிர்ப்பந்தத்துக்கு ஆளாக்கப் படுபவனும் அதிலிருந்து விடுபட்டு, தனது சொந்த எண்ணத்தைச் செயற்படுத்த முனைவான். இது இயற்கையானது. எவராலும் தடுக்க முடியாதது.

ஒருவர் விருப்பத்தை மற்றவர் மீது திணித்து நிர்ப்பந்திப்பது அடிப்படை உரிமைகளுக்கு முரணனது என்பதையும் மறந்து விடலாகாது.

ஒருவனைக் கலந்தாலோசிக்காது, அல்லது அவனுக்குத் தெரியாத ஒரு பொருளை அவனுக்குக் "கட்டி அடிப்பது" பாவமான காரியமும் ஆகும்.

சமூக வாழ்க்கையாயினும் சரி, சமயத் துறையிலாவது சரி, அரசியல் விவகாரங்களிலாவது சரி நிர்ப்பந்தம் ஆகாது அதுநிலைக்காது.

## செய்திச் சாரம்

### சம்பந்தர், சிவா புறப்பட்டனர்

கொழும்பு, ஆக. 15

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள் திரு. இரா. சம்பந்தர், திரு. எம். சிவசிதம்பரம் ஆகிய இருவரும் நேற்று மாலை தமிழகத்திலிருந்து இலங்கை புறப்படவிருந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ)

### பிக்குகளிடம் துப்பாக்கி

வவுனியா, ஆக. 15

களனிப்பகுதியில் பேலிகொடையில் இடம் பெற்ற பொலிஸாரின் தேடுதல் வேட்டையில் தன்னியக்கத் துப்பாக்கிகள் உட்பட பத்துக்கும் மேற்பட்ட துப்பாக்கிகள் கண்டு பிடிக்கப்பட்டன.

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 5 பௌத்த பிக்குகளும் பொலிஸாரினல் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

(உ-164)

### வெங்காயம் விலை வீழ்ச்சி!

கொழும்பு, ஆக. 15

சின்ன வெங்காயத்தின் விலை கொழும்புச் சந்தையில் குறைந்துள்ளதாம்.

50 கிலோ சின்னவெங்காயம் 605 ரூபாவாக முன்னர் விற்றது. இப்போது 299 ரூபாவாகக் குறைந்து விட்டது.

பம்பாய் வெங்காயத்தின் விலையும் 30 சதவிகிதம் குறைந்து விட்டது. (உ-எ)

### எல்லைக்காந்திக்கு விருது!

புதுடில்லி, ஆக. 15

பாரதரத்ன விருது ஜனதிபதி வெங்கட்ராமனல் நேற்று எல்லைக் காந்தி கான் அப்துல் கபார் கானுக்கு வழங்கப்பட்டது.

ஜனதிபதி மாளிகையில் இது சம்பந்தமான வைபவம் இடம் பெற்றது.

மயக்க நிலையில் பல வாரங்களாக இருக்கும் 97 வயதான எல்லைக் காந்தியின் சார்பில் அவரின் மகன் கான் அப்துல் வலிகான் பெற்றுக் கொண்டார். (உ-எ)

### கடன் வழங்குவது நிறுத்தம்!

யாழ்ப்பாணம், ஆக. 15

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை வடக்கில் வீடமைப்புக்காக வழங்கும் கடன்களை நிறுத்தியுள்ளது.

வறியமக்கள் வீடுகளை அமைப்பதற்காக இந்த கடன்கள் இதுவரை வழங்கப்பட்டு வந்தன.

கடன் பெறுவதற்காக வரும் புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

இதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை வடக்கின் பாதிப்பு நிவாரண நிதியுடன் சேர்ப்பதற்காகவே இக்கடன் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (உ-7)

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

**பிறந்தநாள் வாழ்த்து**

நயினை சோமேஸ்வர பிள்ளை நகுலேஸ்வரி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் மகிந்தன் இரண்டாவது பிறந்த நாளை 18. 8. 87ல் தாவடி இல்லத்தில் கொண்டாடவிருக்கின்றார். மிக மகிமையுடன் வாழ பெற்றோரும் மற்றோரும் வாழ்த்துகின்றனர்.

(1461)

**வகுப்புகள்**

புதிய கல்வி நிலையம் கெங்காதரன் ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம். ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரையுள்ள வகுப்புக்களுக்குச் சகல பாடங்களும் திறமை மிக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. ஆண்டு 6 புலமைப்பரிசில் பரீட்சைக்கு விஞத்தாள் மீட்டல் வகுப்புகளும் (புதியபிரிவு) ஆண்டு 11 க. பொ. த. (சா. த) பரீட்சைக்கேற்ப விஷேட வகுப்புக்களும் ஆரம்பமாயுள்ளன. கிளை புதிய கல்வி நிலையம் களபூமி, காரைநகர்.

(1462)

**சேவை**

உங்களின் வீடுகள் (HOUSES) கடைகள், ஸ்தாபனங்கள் மற்றும் கோவில்கள், விளம்பரப் பலகைகள் என்பன மிகச் சிறந்தமுறையில் நாகரிகத்திற்கு ஏற்ப பெயின்டிங்கோ பிறின்ரிங்கோ செய்ய நாடவேண்டிய இடம்: அ. யோகேந்திரன், 40, யாழ் / இந்துக் கல்லூரி ரோட், நீராவியடி, யாழ்ப்பாணம்.

(1502)

**விற்பனைக்கு**

யாழ் பலாலி வீதி ஊடாக அச்செழு, நீர்வேலி 800 இலக்க பஸ் பாதையில் அமைந்த மின் வசதியுடைய செம்மண் காணி விற்பனைக்குண்டு. தொழிற்சாலை, பெருந்தோட்டச் செய்கைக்கு உகந்தது. விளம்பர எண் - 62, மே / பா உதயன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(1476)

யோகமும் போகமும் குருஜி தவயோகி C. K. S எழுதியது உடலும் உள்ளமும் வளம்பெற 61 யோகாசனப் பயிற்சிகள் அடங்கிய அரிய நூல். விலை ரூபா 56/- விற்பனவு பூபாலசிங்கம் புத்தகசாலை நல்லூர், யாழ்ப்பாணம்.

கணிதம் ஆண்டு 8, ஆண்டு 10 பல்தேர்வு வினாக்கள் மயூரதி வெளியீடுகளாக விற்பனையாகின்றன. மாணவர் விடுதலை நாட்களில் தாமாகவே மீட்டல் செய்ய உதவும் நூல்களாகும். கிடைக்குமிடம் பூபாலசிங்கம் புத்தகசாலை.

(1456)

ஆங்கில தட்டச்சு (Silver Reed) வீடியோ கசெட்டுக்கள், கமெரா (Minolta Automatic) வேதுபடக்க Radio, சிவப்பு பட்ட பலைமரம் விற்பனைக்குண்டு. (1464)

நல்லைநகர் நூல் யாழ்ப்பாண இராச்சியத்தினதும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலினதும் வரலாறு கூறும் ஆய்வு நூல். கந்தையா குணராசா எம். ஏ. பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம்.

(1465)

# தமிழ்ப் பிரதேசத்தின் நிர்வாக நடுநிலையமாக திருகோணமலை அமைதலே மிகப்பொருத்தம்

இலங்கையில் சனத்தொகை வசதிகள், வருமானங்கள் அதிகமான இடம் கொழும்பு. காரணம் அது தலைநகரம். யாழ்ப்பாணம் நெடுங்காலமாக இரண்டாம் இடத்தை வகித்து வந்தது.

ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது. 1977 க்குப் பின் இலங்கையில் காலத்திற்குக் காலம் ஏற்பட்டு வந்த கலவரங்களும் சண்டை சச்சரவுகளுமே இதற்குக் காரணங்கள். 77 இல் இருந்து 87 வரை யாழ்ப்பாண நகரம் பெருமளவு சேதங்களுக்கு ஆளாகி வந்துள்ளது.

பொருளாதார ரீதியிலும் யாழ் நகரம் பாதிப்படைந்துள்ளது. யாழ் நகருக்கு வரும் மக்களின் தொகை வெகுவாகக் குறைந்து விட்டது. சிறு கைத்தொழில்கள் செயலிழந்தன. மாநகரசபைப் பகுதிக்குள் உள்ள கடற்றொழிலாளர்களின் தொழில்கள் பாதிப்புற்றன. இன்னும் எத்தனையோ பொருளாதார இழப்புக்கள்.

வடக்கு கிழக்குப் பகுதிகளை உள்ளடக்கிய தமிழர் பிரதேசங்களின் வளர்ச்சிக்கு யாழ் நகர் அடிப்படையாக விளங்கியது. தமிழ்ப் பிரதேச நகரங்களுக்குள் இதுவே முதன்மையானது.

யாழ் நகர் இயக்கமும் வளர்ச்சியும் உடையதாக வேண்டும். அப்போதே சூழவுள்ள பிரதேசங்களும் வளர்ச்சியடையும். யாழ் நகரோடு ஏனைய தமிழ்ப் பிரதேசங்கள் நெருங்கிய உறவுடையன.

பொருளாதார, சமூக, கல்வி, கலாசார அபிவிருத்தியும் புதுமைகளும் உடையதாக யாழ்நகர் வளர்ச்சியடைய வேண்டும். அவை ஏனைய பகுதிகளுக்கும் பரவ வேண்டும்.

யாழ்நகரம் குடாநாட்டுக்குள் அமைந்த சிறு பகுதி. மக்கள் அடர்த்தி கூடியது. எனவே அது குடி வரவுக்கு இடம் கொடுக்க முடியாது. குடா நாட்டில் சனத்தொகை அண்ணளவாக 8 லட்சம். யாழ் நகரில் 1 லட்சத்து 25 ஆயிரம் வரையில் இருக்கலாம். குடாநாட்டின் சனத்தொகை மிருதுவான வளர்ச்சிப் போக்கோடு அமைய வேண்டும்.

## நிர்வாக மையம்

தமிழ்ப் பிரதேசங்களுக்கு ஒரு நிர்வாக மையம் வேண்டும். அத்தகைய நிர்வாக மையமாக யாழ் நகர் அமைய

கைத்தொழில்கள் விருத்தியடைவதும் கடினம். அது விரும்பக்கூடியதும் அல்ல. உடுபுடைவை, நகை, அச்சு, தளபாடம் முதலிய நுண்ணிய எளிய கைத்தொழில்களே விருத்தியாகலாம். கல்வி, மருத்துவம், சேவை முதலியகளைப் பெறமுடியாதிருப்பது பெருங்குறை கண்டி நகரின் வளர்ச்சிக்கு அதன் மத்திய சந்தையே பெரும்பங்கு வகிக்கிறது. எனவே யாழ் நகருக்கும் நல்லதொரு சந்தை தேவை. தற்போது சந்தைப்பகுதிகள் ஒரே இடத்தில் அமையாமல் சும்மா இருப்பதைக் கண்டேன். சாணிகள் உண்டு அவற்றுக்கு முகப்புத்தான் இல்லை. ஸ்ரான்லி வீதி, மணிக்கூட்டு வீதி, மின்சார நிலைய வீதி, கஸ்தூரியார் வீதி ஆகியவற்றுக்குள் அடங்கும் செவ்வகப் பகுதியை ஊடறுத்துக்

னம் ஒன்றை அமைக்க வேண்டும், நகரை அழகுபடுத்தவும் பொழுது போக்குக்குமாக அழகிய புற்றரை ஒன்று அமைக்க வேண்டும். ஒருலட்சம் மக்களை அடக்கக் கூடியதாக ஒரு மைதானம் அமைக்கவேண்டும். தற்போதுள்ள முற்றவெளியை அத்துமீறிய குடியேற்றம் முதலானவற்றிலிருந்து காக்கவேண்டும். யாழ் நகருக்குத் தற்போதுள்ள சுப்பிரமணியம் பூங்கா போதாது. அழகிய பாரிய பூங்கா ஒன்று தேவை. சென்னை மரீனு கடற்கரை போன்ற ஒன்று அமைய வேண்டும். பண்ணைப் பாலப்பகுதிதான் அதற்கு ஓரளவு பொருத்தமானது.

### யாழ் நகரும் யாழ்ப்பாணப் பிரதேசமும்

நகரத்தை மட்டும் பாராமல் குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கும் நகரத்தோடு கூடிய தொடர்புகளை ஏற்படுத்தவேண்டும்.

### புகையிரதப் பாதை

அப்பகுதிகளுக்கும் கல்வி முதலான வசதிகளை ஏற்படுத்திக்

கொடுக்கவேண்டும். போக்குவரத்து வசதிகள் அதிகரிக்கப்படல் அவசியம். சுற்றுப்புகையிரதப்பாதையொன்று அமைத்தல்வேண்டும். தற்போது டானு(L) வடிவில் ஒரு புகையிரதப் பாதை உண்டு. காங்கேசன்

துறை யாழ்ப்பாணம் கொடிகாமம் ஆகிய பகுதிகளை இணைத்ததாக அது உள்ளது; இனிப் பருத்தித்துறையையும் இணைத்து காங்கேசன் துறை யாழ்ப்பாணம் கொடிகாமம் பருத்தித் துறை என்று ஒரு சுற்றுப்பாதை அமைக்கலாம். அதற்கு இன்னும் பதினைந்து இருபது மைல் அளவு பாதையே அமைக்கவேண்டி இருக்கும்.

அதுமட்டுமல்லாது செல்வச்சந்நிதியிலிருந்து உகந்தைமுருகன்கோவில் வரைக்கும் ஒரு தொடர் புகையிரதப் பாதை அமைத்து வடக்குக் கிழக்கு இணைப்பை உறுதிப்படுத்தவேண்டும்.

### விமான சேவை

பலாலி - கொழும்பு
பலாலி-மட்டக்களப்பு
பலாலி - திருச்சி
பலாலி - திருவனந்தபுரம்

என விமானச்சேவையை விஸ்தரிக்கவேண்டும்.

### கப்பற்சேவை


காங்கேசன் - நாகப்பட்டினம் கப்பல் சேவையை ஆரம்பிக்கவேண்டும். அது ஆரம்பிக்கப்படுமாயின் இலங்கைக்கும் தமிழ் நாட்டிற்குமான கல்வி, சேவை, கைத்தொழிற் பரிமாற்றங்கள் முதலியன நடைபெற வாய்ப்பு ஏற்படும்.

### இராஜபவனி சாலை

யாழ்ப்பாணத்தின் ஒரு பெருங்குறை ராஜபவனிக்குகந்த ஒருவீதி இல்லாமை, பலாலி வீதியை அகட்டிச் செப்பனிட்டு அக்குறையை நிவர்த்தியாக்கலாம். ★

**தொகுப்பு: ரதபரன்**

> யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் சென்ற புதன் பிற்பகல் புவியியற் கழக ஏற்பாட்டில் நடைபெற்ற கருத்தரங்கில் புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் பாலசுந்தரம் முன்வைத்த கருத்துக்கள் இவை.



கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலையின் வனப்பு மிக்க காட்சி

வற்றின் வளர்ச்சியிலேயே யாழ் நகர் தங்கியுள்ளது. பொருளாதாரத்தைப் பொறுத்த அளவில் சேவைத்துறை தான் எதிர்காலத்தில் முக்கிய இடம் வகிக்கும்.

அத்துடன் ராஜீய விடயத்திலும் யாழ்நகர் முக்கியத்துவம் பெறுவது கடினம். வெளிநாட்டுத் தூதராலயங்களின் இரண்டாம் காரியாலங்கள் கண்டியில் அமைந்து இருக்கின்றன. இந்திய பிரித்தானிய அமெரிக்கத் தூதராலய அலுவலகங்கள் தான் அவை.

### எல்லை விஸ்தரிப்பு

மாநகர சபையின் எல்லையைத் தற்போதைய நிலையிலேயே வைத்திருப்பதா அல்லது விஸ்தரிப்பதா? என்பதும் தீர்மானிக்கப்பட வேண்டியது. தற்போதைய அளவு 20 சதுர கிலோ மீற்றர். திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் முதலிய நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுப்பகுதிகளையும் சேர்ப்பின் நகரின்

தூரத்தூர அமைந்துள்ளன. போக்குவரத்து நெரிசல் மிக்க ஒடுக்கமான வீதிகளும் பழைய கட்டிடங்களுமாகச் சந்தை காட்சியளிக்கிறது.

வலையமைப்பிலான வீதிகள் நகருக்குப் பெரும் இடைஞ்சலாக உள்ளன. முகப்பற்ற கட்டிடங்களும் காணிகளும் ஒருவழியிற் சென்று வேறு வழியால் வரமுடியாத குருட்டு ஒழுங்கைகளும் வர்த்தக சேவை விருத்திக்கு உகந்தன வல்ல. எனவே வியாபாரப் பகுதியின் அபிவிருத்தி அவசியமானதாகும்.

முதலில் நகர அபிவிருத்திக்கு வரக்கூடிய நிலப்பரப்பை இனங்காணவேண்டும். நாவலர் வீதி, பருத்தித்துறை வீதி சிவன் பண்ணைவீதி, மானிப்பாய் வீதி, புல்லுக்குளம், கொட்டடி என்பவற்றைவியாபாரப் பகுதிகளாக வரையறுக்கலாம்.

இதை மேலும் இரு

கிழக்கு மேற்காகவோ அல்லது வடக்குத் தெற்காகவோ எந்த ஒரு பாதையும் செல்லவில்லை. வண்ணான் குளப்பகுதியில் பெருமளவு காணிகள் வெறுமனே கிடக்கின்றன. இத்தகைய ஒரு பாதை இருக்குமாயின் அக்காணிகள் பயன்பாட்டுக்குரியதாகும். ஆஸ்பத்திரி வீதிக்குத் தெற்கேயும் தென்னந்தோட்டமாகக் காணிகள் உள. வர்த்தகவங்கிக்குப் பின்னுலும் அவ்வாறே. இவையெல்லாம் தனியார் காணிகள்தான். எனினுந் நரமான வீதிகளை அமைத்தால் அவர்கள் அதை அபிவிருத்தி செய்வார்கள்.

வீடில்லாப் பிரச்சினையும் முக்கியமானது. கரையூர், பாஷையூர், நாவாந்துறை. கொழும்புத்துறைப் பகுதிகளில் பின்தங்கிய மக்கள் நெருக்கமாக வாழ்கிறார்கள். அங்கே காணித் தட்டுப்பாடும், வீட்டுத் தட்டுப்பாடும் உண்டு. கடல் மீட்பு நடவடிக்கை மூலம் இப்பிரச்சினையை ஓரளவுச் தீர்க்கலாம். கண்ணபுரம், நாவாந்துறை நிக்லஸ் மைதானம் பாஷையூர்ப் பகுதிகளில் இத்தகைய கடல் மீட்பு நடவடிக்கைகள் முன்பும் நடைபெற்றன.

அத்துடன் உபநகரங்கள் அமைக்கப்படவேண்டும். நாவற்குளி, கல்லுண்டாய், அல்லைப்

> ✶ யாழ் மாநகரசபை எல்லை விஸ்தரிக்கப்படவேண்டும்.
> ✶ இப்பகுதியில் உள்வலயம், வெளிவலயமென இரு பிரிவுகள் உருவாகலாம்.
> ✶ வாகன தரிப்பிடம் தேவை.
> ✶ நல்ல வரலாற்று ஞாபகச்சின்னம் தேவை.
> ✶ இராஜபவனி சாலை வேண்டும்.

**தமிழ்ப் பிரதேசங்களுக்கு ஒரு நிர்வாக மையம் வேண்டும். அத்தகைய நிர்வாக மையமாக யாழ்நகர் அமைய முடியாது திருகோணமலையே அதற்கு உகந்தது. புவியியல் ரீதியிலும் அதுவே சிறந்ததும், பொருத்தமானதும் ஆகும். தமிழ் மக்களின் நெடுங்கால அபிலாஷையும் அதுவே.**

முடியாது. திருகோணமலையே அதற்கு உகந்தது. புவியியல் ரீதியிலும் அதுவே சிறந்ததும் பொருத்தமானதும் ஆகும். தமிழ் மக்களின் நெடுங்கால அவாவும் அதுவே.

யாழ் நகர் வடமாகாணத்தின் நிர்வாக மையமாக அமைவதும் சிறந்ததல்ல. வடமாகாணத்தின் மத்தியிலுள்ள மாங்குளமே அதற்குப் பொருத்தமானது.

நிர்வாக மையங்கள் இவ்வாறு அமைவது குடாநாட்டின் குடிசனப் பிரச்சினைக்கும் தீர்வாகலாம். குடா நாட்டின் தலைமைப் பிரதேசமாகவே யாழ் நகர் அமையலாம். இதைவிடப் பெரிய அந்தஸ்து யாழ் நகருக்குப் பொருத்தமானதல்ல.

யாழ் நகரில் பாரிய

பரப்பு 40 சதுர கிலோ மீற்றராக விரியும். இரண்டு லட்சம் மக்களைக் கொண்டதாகவும் அமையும். குடிநீர் வசதிகளும் கிட்டும். இது விடயத்தில் அப்பகுதி மக்களின் கருத்துக்கள் அறியப்பட வேண்டும்.

யாழ்நகர் வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டது. எல்லாமாக 24 வட்டாரங்கள். இப்பிரிப்பு முறை பொருத்தமானதல்ல. சட்டப்படியும் பிழையானது. வேறு விதமான உப பிரிவுகளை உருவாக்க வேண்டும்.

நகரின் வளர்ச்சிக்கு மத்திய வியாபாரப்பகுதி துடிப்பாக இருக்கவேண்டும். யாழ் நகர வியாபாரப் பகுதி பல குறைபாடுகளை உடையது. இதனால் நகரின் வளர்ச்சி பாதிப்படையும். மக்கள் தமது தேவைகள் [illegible]

பிரிவுகளாக்கலாம்.

(1) உள்வலயம்
(2) வெளிவலயம்

காங்கேசன்துறைவீதி, மானிப்பாய் வீதி. சிவன் பண்ணை வீதி, கன்னாதிட்டி, ஸ்ரான்லி வீதி, பருத்தித்துறைவீதி, ஆஸ்பத்திரி வீதிப் பகுதிகளை உள்வலயமாகவும்,

> செல்வச்சந்நிதியிலிருந்து உகந்தை முருகன் வரைக்குப் ஒரு தொடர் புகையிரதப் பாதை அமைத்து வடக்கு கிழக்கு இணைப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

ஏனைய பகுதிகளை வெளிவலயமாகவும் பிரிக்கலாம்.

யாழ்நகரின் பெருங்குறை அதன் காணிப் [illegible]

பிட்டிப்பகுதிகள் இதற்கு உகந்தவை.

### வாகன தரிப்பிடம்

போக்குவரத்து வாகனங்கள், யாழ் நகரில் தற்போது உள்ளவற்றை விட எதிர்காலத்தில் பன்மடங்கு அதிகரிக்கும். யாழ்ப்பாணத்துத் துவிச்சக்கரவண்டிகளெல்லாம் கார்களாக மாறலாம். அத்தகைய ஒரு நிலையில் அவற்றை நிறுத்துவதற்கேற்ற தரிப்பிடங்களை இப்போதே திட்டமிட்டு அமைக்கவேண்டும். ஐரோப்பிய நாடுகளின் அனுபவத்தைக்கொண்டு இந்த விடயத்தில் சற்றுக் கூடிய அக்கறை செலுத்தவேண்டும். பஸ் நிலையம், மினிபஸ் நிலையம் என்பன ஒழுங்குபடுத்தப்படவேண்டும்.

யாழ் நகரின் முக்கிய [illegible] சிறந்த [illegible] ஞாபகச் சின்

# பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா, ஈராக் ★

| | | | |
|---|---|---|---|
| 1. | V. K. ஐபாத்துரை | H 0377361 | புத்தூர் |
| 2 | V. S. பரமசிவம் | J 0047709 | கோண்டாவில் |
| 3 | K. குணசீலன் | H 0433269 | நல்லூர் |
| 4. | J. ராஜதுரை | H 0312207 | — |
| 5. | V. சிவகுருநாதன் | G 0329634 | காங்கேசன்துறை |
| 6 | P. குணபாலன் | H 0312207 | ,, |
| 7. | S. சிறிஸ்காந்தராசா | H 0464394 | — |
| 8. | A. பத்மநாதன் | G 0047702 | — |
| 9. | V. வாசுதேவன் | J 0066612 | — |

மேற் குறிப்பிட்டுள்ள அனைவருக்கும் பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் உடனடியாகக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

✶ பின்வரும் வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் எம்மிடம் உண்டு

OPEN VISA

★ BEIRUT (லிபியா)

(CLEANERS)

✶ 3 வெற்றிடங்கள் மட்டுமே உண்டு
✶ சாப்பாடு, இருப்பிட வசதிகளுடன் அடிப்படைச் சம்பளம் ரூபா 3500/-
✶ உடன் தொடர்பு கொள்ளவும்.

★ JEDDAH (American Company) Maintenance Cleaners

(A) 25 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு மட்டும் சாப்பாடு இருப்பிட வசதியுடன் சம்பளம் மட்டும் 500 S. R. இவர்களது பயண ஒழுங்குகள் 15.09.87 ற்கு முன் செய்து கொடுக்கப்படும்.

(B) 21 வயதிற்கு மேற்பட்டவர்கள் CLEANERS சாப்பாடு இருப்பிட வசதியுடன் சம்பளம் 350 S. R.

★ IRAQ (HOSPITAL CLEANERS JAPANESE COMPANY)

18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் சம்பளம் இருப்பிடவசதியுடன் 65 டினர். ஏற்கனவே பாஸ்போட் தந்தவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். அவர்களுக்கு விசா தயாராக உள்ளது. பிரயாண ஒழுங்குகளின் திகதி பின்பு அறிவிக்கப்படும்

★ தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

★ T. இந்திரநாதன் ★
M. THREE TRAVELS
96, Kachcheri Nallur Road,
Nallur, Jaffna.
(முத்திரைச் சந்திக்கு அருகாமையில்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# திருமண வீட்டில் தொண்டு

**நடைச்சித்திரம் (2)**

இக்ராமத்தில் நடக்கும் எந்தத் திருமண வீட்டிலும் அழைப்பு இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி பட்டாளம் பாட்டா கலந்து கொள்வார். தாலி கட்டுவதற்கு ஒரு கிழமை முந்தியே போய் விடுவார். பின்னரும் அங்கு நாலு நாள் தங்கி விடுவார். ஒரே தொண்டுதான். முதல் முறை போகும்போது இப்படிப் பேசுவார்.

'ஆகா! வீட்டுக்காரரே கேளீர்! முத்தையா அம்பலவாணர் அல்லது எம். ஏ. வார்ணர். அல்லது அடைச்சல் குரல் அம்பலவாணர். அல்லது பட்டாளம் பாட்டா ஆகிய நான் இங்கே தொண்டு செய்ய வந்து விட்டேன்' இதனை எல்லோரும் வரவேற்பர். பட்டாளம் பாட்டா இருக்கும்போது நமக்கு என்ன குறை?' என ஊரவர் பேசி மகிழ்வர்.

தாரம் இழந்த நான் பந்தற்கால் நடப்படாது. தாலிக்காரர் யாராவது நட்டுவிட்டால் நான் பந்தலைப் போட்டுவிடுவேன்' என்பார். அப்படியே அழகாகச் செய்து விடுவார். பந்தலைக் கூட்டுவது, தண்ணீர் தெளிப்பது எல்லாம் அவர்தான். உயர்ந்தோருக்கு உரிய வேலை, தாழ்ந்தோருக்கு உரிய வேலை என்ற வேறுபாடு அவருக்குக் கிடையாது. கலியாண வீட்டிற்குப் பெரிய கிடாரம் வைத்துச் சோறு சமைப்பார்; விறகு கொத்துவார்; தேங்காய் துருவுவார்; பால் பிழிவார். அந்த இரும்புக் கையால் தேங்காய் பிழிந்தால் பூவிலே பால் இருக்காது. திருமண வீட்டுவேலை எல்லாம் அவருக்குத் தெரியும். வேலை செய்யும்போது சப்பாத்தைக் கழற்றி வைப்பார். வேலை முடிந்ததும் சப்பாத்தைப் போடுவார்.

கர்ணனுடன் கவச குண்டலம் பிறந்தது போல அவரும் சப்பாத்துடன் பிறந்து விட்டார் எனச் சொல்லலாம்.

பந்தல் போடுவதற்கு இளைஞர் கூட்டம் ஒன்றைத் தன்னுடன் வைத்திருப்பார். இந்தக் கௌரவப் படைக்குத் தன் செலவிலே வடை, தேநீர், வெண்சுருட்டு எல்லாம் வழங்குவார். திருமணம் நடக்கும் வீட்டிலே உதவி செய்வார்; உணவு அருந்த மாட்டார்.

'தொண்டு செய்ய வந்தேன். உண்டு களிக்க வரவில்லை. வேண்டுமானால் தாலி கட்டிய பின்னர் இந்தக் கட்டைக்கு ஒரு வயிறு சோறு போடுங்கள்' என்பார். அத்தனை பண்பு நிரம்பியவர். நாலாம் சடங்கும் முடிந்த பின்னர்தான் பந்தலைக் குலைப்பார். இரவல் எடுத்த மரம் தடி எல்லாவற்றையும் கணக்குப் பிழையாமல் திருப்பிக் கொடுத்த பின்னர்தான் அவருக்கு ஆறுதல் வரும்.

ஓமம் வளர்க்கும் இடத்தில் குருக்களுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் சேர்த்து ஒழுங்காக முறையாக வைப்பார். 'யார் பட்டாளம் பாட்டாவோ செய்த ஒழுங்கு? எனக்கு ஒரு வேலையும் இராது' எனப் புரோகித ஐயர்மார் சொல்லி மகிழ்வர்.

ஆனால் தாலி கட்டி, அறுகரிசி எடுக்கும்போது பாட்டா எங்காவது மூலையில்போய் மறைந்து விடுவார். 'தாரம் இழந்த நான் முன்னுக்கு நிற்கப்படாது, அபசகுனம்' என்பார். பட்டாளம் பாட்டா உண்மையில் விளக்குமாறு போன்றவர். விளக்குமாறு எல்லாவற்றையும் கூட்டும். பின்னர் மூலையில் ஒதுங்கிவிடும்.

இப்படியான வேளையில் பட்டாளம் பாட்டா தன் அருமை மனைவி அருமை முத்துவைப் பற்றி நினைப்பார். சண்கள் பனித்துவிடும். 'சே! இ[illegible]



**தமிழருவி. த. சண்முகசுந்தரம்**

மண வீட்டிலே கண்ணீர் சிந்தக்கூடாது' எனத் தன்னைத்தானே தேற்றிக் கொள்வார். புதுமணத் தம்பதிகளுக்கு அன்பளிப்பாகப் பணம் வழங்குவார். 'பொருளாக வழங்குவதிலும் பார்க்கப் பணமாக வழங்குவது நன்று. அந்த இளம் சோடி பின்னர் விரும்பியதை வாங்கட்டும், என்பார் பட்டாளம் பாட்டா.

எந்தத் திருமண வீட்டு முடிவின் போதும் பட்டாளம் பாட்டா தனக்கும் ஏதாவது தேடிக் கொள்வார்' பந்தல் கப்பு அவரின் காலிலே விழும். பனஞ்சிராம்பு அவரின் கையிலே ஏறி விடும். கத்தி அவரின் கையைப் பதம் பார்க்கும், அல்லது அலவாங்கு காலில் விழும். கால் தடக்கிக் கீழே விழுவார். இப்படி ஏதாவது 'பட்டு அனுபவிப்பார்' இருந்தும் தொண்டு செய்வதை விட மாட்டார். 'அடுத்த கலியாண வீட்டிலே கவனமாக இருப்போம்' என்பார். இருந்தும் அவரின் போதாத காலம் ஒவ்வொரு கலியாண வீட்டிலும் அவருக்கு ஏதாவது நடந்து விடும்.

முருகபுரம் கிராமத்தில் அவருக்கு எவரும் பகை இல்லை. எதிரி சத்துராந் கிடையாது. எல்லோரும் உறவினர். எல்லோரும் நண்பர். கிராமத்துக் கோளாறு கோவிந்தர் 'அகோவிந்தம்' அடைந்த போதும் கூட அவருக்காகப் பிரார்த்தனை செய்தவர் ஒரே ஒருவர்தான். அவர் பட்டாளம் பாட்டா. 'பட்டாளம் பாட்டா இல்லாவிட்டால் இந்த ஊரின் நிலை என்னவாகும்?' எனப் பலரும் பேசிக் கொள்வர்.

'பிறந்தவன் இறப்பான். இறந்தவன் பிறப்பான் இதுதான் உண்மை' எனப் பட்டாளம் பாட்டா கூறிச் சிரிப்பார். இறப்பைப் பற்றிக் கவலைப்பட அவருக்கு நேரம் இல்லை. தொண்டு செய்யவே அவருக்கு நேரம் போதாது. உண்பது உறங்குவது போக ஊர்த் தொண்டுதான் அவரின் வேலை.

(வளரும்)

# தமிழ்ப்பணி, கலைப்பணியுடன் ஆன்மீகப்பணி ஆற்றும் ஆதீனம்

நாளை நல்லை நகரில் மாபெரும் விழா! அது தான் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் குருமணிக்கு நடைபெறும் பீடாரோஹண விழா. இந்த விழா நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன 21 வது ஆண்டு பீடாரோஹண விழாவாகக் கோலாகலமாக நாளை கொண்டாடப்படுகிறது.

நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நல்லை ஆதீனத்தில் முதலாவது மகா சந்நிதானமாகப் பட்டம் சூட்டி அருளாட்சி ஆரம்பித்த தினம் 1966 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் ஆறும் நாளான - முருகனின் நட்சத்திரமான கார்த்திகைத் திருநாளாகும்.

அன்று முதல் இன்று வரை நல்லூர் ஆதீனம் ஆண்டு தோறும் இப் பீடாரோஹண விழாவை வெகு கோலாகலமாக - பக்திசிரத்தை அருள் ஒளி பரவும் வகையில் கொண்டாடி வருகிறது.

நல்லூர் மண்ணுக்குப் பெருமதிப்புண்டு. இந்த மண்ணை அள்ளி விபூதியாகத் தரித்துக்கொள்ளலாம். இத்தகைய சிறப்பு வாய்ந்த மண்ணிலேயே முருகன் குடி கொண்டான். நல்லை முருகன் தான் குடி கொண்டது மாத்திரமன்றி தன் அடியவனான ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் மூலம் ஆதீனம் ஒன்றையும் அமைத்தருள் யுள்ளான்.

இந்த ஆதீனமே ஈழத் திருநாட்டின் ஒரே ஒரு சிறந்த ஆதீனமாக மிளிர்கின்றது. இந்த ஆதீனத்தின் பெயரை நாம் சிந்தித்துப் பார்க்கும்போது இதன் சிறப்பும் பொருத்தமும் தெளிவாகின்றது.

சம்பந்தருக்குத் தாளமும் அப்பருக்கு உழவாரமும் சுந்தரருக்கு பிரம்பு, பூ முதலானவையும் மாணிக்கவாசகருக்கு ஏடும் உருத்திராக்கமும் இறைவனால் அருளப்பட்டவை.

நல்லைக்குருமணி சிறுவராக இருக்கும் போது தாளமிட்டு பஜனைகள் நடத்தினர். தாளத்தைக் கொண்டு நாட்டிலுள்ள பல பாகங்களிலும் கதாப் பிரசங்கங்கள் செய்தார். அவரோடு தாளம் தொடர்புடையதாகி விட்டது. இதனாலோ என்னவோ முருகன் அருளால் அவர் அமைத்த ஆதீனத்திற்கு திருஞானசம்பந்தரின் பெயர் அமைந்து விட்டது.

சுமார் 40 வருடங்கள் கடவுள் பணியே பணியாகக்கொண்டு வாழ்ந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பங்குனித் திருவாதிரை நட்சத்திரத்தில் சமாதி எய்தினர்கள்.

செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகளும் பங்குனியிலேயே சமாதி எய்தினர். முருக வழிபாடுடைய இவர்கள் மூவரும் பங்குனி மாதத்தில் சமாதி எய்தியமையும் சிந்திக்கத்தக்கவை.

திருஞானசம்பந்தரோடு நல்லைக் குருமணியை ஒப்பிடும்போது சம்பந்தர் அவதரித்தது சித்திரைத் திருவாதிரை. பால் குடித்ததும் திருவாதிரை. இவர்கள் இருவருக்கும் நட்சத்திரம் பொருந்தியிருக்கிறது.

## நாளை இருபத்தோராவது ஆண்டு பீடாரோஹண விழா

வேதாந்த சித்தாந்த வித்தகரான பிரம்மஸ்ரீ செந்திநாதஐயர், செந்தமிழ் இலக்கண இலக்கிய வித்தகரான வித்துவான் பிரம்மஸ்ரீ கணேசையர் ஆகியோரது பேர

**சைவப்புலவர் என். கே. தங்கரத்தினம்**

ஞராகிய நல்லைக் குருமணி அவர்கள் வேதாந்தச் செம்பொருளோடு செந்தமிழ் இலக்கண இலக்கியமும் கைவரப் பெற்றவர். இன்னிசையால் இறையருள் கூட்டும் பண்பினரான நல்லைக் குருமணி ஆரம்பித்த இந்த ஆதீனம் இவ்வளவு காலமாக ஆற்றும் பல்வகைப் பணிகள் சொல்லும் தரமன்று.

நல்லைக்குரு பணியில் தொண்டனாகச் சேர்ந்து 10 வயது முதல் பணியாற்றி நெருங்கிய தொண்டனாகி, இளவரசாகி, தம்பிரானாகி இன்று இரண்டாவது சந்நிதானமாக விளங்குபவர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர பரமாசார்ய சுவாமிகளாவர்.

1981 முதல் பீடாபிஷேகம் செய்யப்பெற்ற ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் இரண்டாவது குருமகா சந்நிதானமாக இருந்து ஆதீனத்தை மிகச் சிறப்பாக வளர்த்து வருகிறார்கள்.

ஆண்டு தோறும் பீடாரோஹண விழாவைச் சிறப்பாக நடத்தி வருகின்றார்கள்.

இந்த ஆதீனத்தில் நடைபெறும் நிகழ்ச்சித் திட்டங்களைப் பார்க்கும்போது இது ஒரு பல்கலைக் கழகமாகவே காணப்படுகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பெருந்தொகையான துறைகள் வளர்க்கப்படுகின்றன.

அடியவர்களுக்கு அருள்அமுதூட்ட ஆண்டு தோறும் அபிடேகம் [illegible] ஏறிப் புதுப் பொலிவு [illegible] எய்தும் திருநாளே இந் நாள். ★

# நன்னீர்க் குளத்தின் சூழலியல்

உள் நாட்டுக்குரிய சிறிய நீர்த்தேக்கங்கள் குளங்கள் எனப்படும். (மிகச்சிறியவை குட்டைகள்) இவை பெரும்பாலும் மனிதனால் ஏற்படுத்தப்பட்டவையாக விருக்கும். மழைநீரின் தேக்கத்தால் ஏற்படுகின்ற காரணத்தினால் நன்னீருக்குரியவையாக இருக்கும். ஆயினும் குளம் அமைந்துள்ள நிலத்தின் பண்புகளுக்கேற்ப நீரின் தன்மை மாறுபடலாம். (உதாரணமாக யாழ் குடாநாட்டில் உள்ள குளங்கள் யாவும் ஓரளவு உவர்த் தன்மையானவை)

குளத்திலுள்ள நீர் தூயதோ (fresh) அல்லது உவர்த்தன்மையுடையதோ (Brakish) என்பதை இரசாயன முறைகளிலும் அறியலாம், குளத்திலுள்ள உயிரினங்களைக்கொண்டு மறியலாம். நீரின் இயல்பை அறிவுறுத்தும் உயிரினம் காட்டிகள் (Indicator plants and animals) எனப்படும். பொதுவாகக் குளங்கள் ஏனைய நீர் நிலைகளுடன் தொடர்பற்றவையாக இருக்கும். அதாவது ஒரு தனிமைப் படுத்தப்பட்ட வாழிடமாக (Isolated Habitat) இருக்கும். ஆயினும் பெரிய குளங்களுக்கு ஆறுகளிலிருந்து இணைப்புக் கால்வாய்கள் இருக்கலாம். மேலும் மழைக் காலங்களில் குளங்களுக்கிடையே தற்காலிக தொடர்புகள் ஏற்படுவதுண்டு. அங்கி

> பாடசாலை மாணவர்கள் குறிப்பாக க.பொ.த.சாதாரணதர உயர்தரவகுப்பு மாணவர்களின் நலன்கருதி அவர்கள் பயிலும் பாடங்களுக்கு உசாத்துணையாக அமையும் ஆக்கங்கள் இப்பகுதியில் கிழமைதோறும் வெளியாக உள்ளன.

**பாடம் பயில்வோம்**

களின் பரம்பலுக்கும், பொதுமைத் தன்மைக்கும் இது காரணமாக அமையும்.

மழைநீரைக் கொண்டிருப்பதால் குளங்களின் நீரினளவு காலநிலையுடன் தொடர்புடையதாக அமையும். மழைக்காலங்களில் பெருகியும். வரண்ட காலங்களில் வற்றியும் காணப்படும். வரண்ட காலங்களில் பூரணமாக வற்றிப் போகவுங்கூடும்.

பொதுவாக தரைச் சூழலைக் காட்டிலும் நீர்ச்சூழல் ஏற்றதாக விருப்பதனால், சிறப்பாக வரண்ட பிரதேசங்களில், தரைச்சூழலைக் காட்டிலும் நீர்ச்சூழலில் அதிக எண்ணிக்கையில் உயிரினங்கள் கூடிய அடர்த்தியில் காணப்படும்.

நன்னீருக்குரிய நீர்த்தேக்கங்கள் முதலான வழிமுறை வருதலில் பங்கு கொள்பவையாக இருக்கின்ற காரணத்தினாலும் இவற்றின் சூழலியல் பற்றிய அறிவும், ஆய்வுகளும் பயனுடையதாக அமையும்.

**கே. எஸ். குகதாசன்**
(அதிபர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

(வளரும்) ★

# உலகையே வியக்க வைக்கும் இந்திய வெளியுறவுக் கொள்கை

**சிறப்புக் கட்டுரை**

"அகில உலகமும் உறங்கிக் கொண்டிருக்கையில் இந்தியா விழித்தெழுகிறது''

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு ஏகாதிபத்தியப் பிடியில் இருந்து சுதந்திரம் பெற்று, அச் சுதந்திரம் நடு இராத்திரியில் பிரகடனப்படுத்தப் பட்டு, ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது ஜவஹர்லால் நேரு அவர்களால் கூறப்



இந்திராகாந்தி

பட்ட பொன்னான வார்த்தைகள் இவை.

சுதந்திரம் பெற்ற இந்தியா சர்வதேச அரங்கில் துணிகரமான சாதனை புரிந்தது. ஸ்டாலினின் ஆட்சியில் இருந்த சோவியத் யூனியன் மேற்கு நாடுகளுக்கும், மற்ற நாடுகளுக்கும் ஒரு புதிராகவும், கேள்விக் குறியாகவும் இருந்தது. மேற்கு நாடுகள் சோவியத் யூனியனை ''இரும்புத்



ராஜீவ்காந்தி

திரை'' என்றே வர்ணித்தன. அவை சோவியத் யூனியனை சந்தேகக்கண் கொண்டு பார்த்தன. இந்தியா அந்த இரும்புத்திரையைக் கிழித்து, [illegible] உள்ளே சென்று ராஜதந்திர உறவுகளையும், கலாசார உறவுகளையும், தோற்றுவித்தது. இது உலக மக்களை வியப்பில் ஆழ்த்தியது.

மாசேதுங்கின் சீனக் குடியரசை மேற்கு நாடுகளும், அதனைச் சார்ந்த நாடுகளும் சந்தேகக்கண் கொண்டு நோக்கி அதனைப் புறக்கணித்து இருந்த நேரம், இந்தியா நேசக் கரத்துடன் அரவணைத்தது. அன்று சீனப்பிரதமரின் இந்திய விஜயம் அகில உலகத்திற்கும் வியப்பையும், அதிர்ச்சியையும் கொடுத்தது. உலகிலே இரு பெரிய நாடுகள் ஒன்று சேர்ந்ததை மேற்கு நாடுகள் சந்தேகத்துடன் பார்த்தன.

### ஏகாதிபத்திய எதிர்ப்பு

ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் கீழ் அடிமைப் பட்டிருந்த இந்தியா சுதந்திரம் அடைந்தபின், அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், அடிமைப்பட்ட நாடுகளுக்காகவும் குரலெழுப்பத் தவறவில்லை. போர்த்துக்கீசிய ஏகாதிபத்தியத்தை இந்தியாவில் இருந்து ஒழிக்க இந்தியா எடுத்த இராணுவ நடவடிக்கையானது இந்தியாவின்

## பஞ்சசீலம், அணிசேராமை ஏகாதிபத்திய,இன ஒதுக்கல் எதிர்ப்பு

மனஉறுதியையும் துணிச்சலையும் உலகிற்கு எடுத்துக் காட்டக்கூடியதாக அமைந்தது.


### பஞ்சசீலம்

சர்வதேச அரங்கில் புதியதோர் அரசியல் கொள்கையை பஞ்சசீலம் எனும் சித்தாந்தத்தை உருவாக்கியதன் மூலம் அறிமுகப்படுத்திய பெருமை இந்தியாவைச் சார்ந்தது. பான்டுங் மாநாட்டில் பஞ்சசிலக் கொள்கைகள் மிகப்பிரபலமாகி, அணிசேரா நாடுகள் என்ற கூட்டு அமைப்பு ஏற்படுவதற்கு அத்திவாரமாக அமைந்தது. இன்று மிகவும் போற்றப்பட்டு உலகின் கவனத்தை ஈர்த்திருக்கும் இந்த அமைப்பு இந்தியாவின் முயற்சியால் உருவானதொன்றே. மக்கள் சீனக் குடியரசை பலநாடுகள் பகைமைக்கண் கொண்டு

**- ப. பாலமுகுந்தன் -**

நோக்கிய அந்தக் காலகட்டத்தில் சௌ. என்லாயை பான்டுங்மாநாட்டில் கலந்து கொள்ளச் செய்து பஞ்சசிலக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ள வைத்த பெருமை இந்தியாவைச் சார்ந்தது.

சுதந்திரம் பெற்ற பின்பு தொடர்ந்தும் பொதுநல அமைப்பு நாடுகளில் ஒன்றாக அங்கத்துவத்துடன் இருக்க



மகாத்மா காந்தி

வேண்டும் எனத் தீர்மானித்து அவ்வமைப்பில் சிறந்த முறையில் செயல்பட்டு மற்ற அங்கத்துவ நாடுகளின் மதிப்பையும் நட்பையும் பெற்றது குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் ஆக்கபூர்வமான செயல்பாடுகள் மற்ற அங்கத்துவ நாடுகளுக்கு ஓர் உந்து சக்தியாகத் திகழ்ந்தன.

### இந்திய இராணுவம்

கொரியா, சைப்பிரஸ், கொங்கோ, எகிப்து போன்ற நாடுகளில் இந்திய இராணுவம் ஆற்றிய சேவை அளப்பரியது. உள்நாட்டு யுத்தத்தினாலும், வெளிநாட்டுச் சக்திகளினாலும் கொங்கோவில் இரத்தக் களரி ஏற்பட்டு, நாடு நிலைகுலைந்து இருந்த வேளையில் அமைதி பேணப்போன இந்திய இராணுவம் உலகமே வியக்கும்வகையில் செயற்பட்டது. இந்திய படைக்குத் தலைமைதாங்கிய தமிழ் நாட்டைச் சேர்ந்த தளபதி ராஜா தங்கப்பதக்கம் பரிசளிக்கப்பட்டுக் கௌரவிக்கப் பட்டார். இந்திய இராணுவத்தின் அமைதி பேணும் சேவை ஒரு தொடர்கதையாகத் தொடர்கிறது. இப்போது இலங்கையிலும் அதன் சேவையை நாம் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

### பங்களாதேஷ் விடுதலை

பங்களாதேஷ் என்னும் நாட்டை உருவாக்கியதன்மூலம், இந்தியா சரித்திரத்தில் அழியா இடம் பெற்றுள்ளது. பாகிஸ்தானின் அட்டூழியங்களுக்கும் சித்திரவதைகளுக்கும் உள்ளாகி இருந்த கிழக்குப் பாகிஸ்தான் மக்களை அழிவின்றும் மீட்டு, பங்களாதேஷ் என ஒரு நாட்டை உருவாக்கியதன் மூலம், தனது பலத்தையும், மனஉறுதியையும் உலகத்திற்கு எடுத்துக்காட்டியது.

### இன ஒதுக்கல் எதிர்ப்பு

சுதந்திர இந்தியா உருவாகுவதற்கு காரண கர்த்தாவாக இருந்த காந்தியடிகள் தென் ஆபிரிக்காவில் வாழ்ந்த காலத்தில் அங்கு நிலவிய இன ஒதுக்கலைக் கண்டித்து உண்ணாவிரதம் இருந்தார். வெள்ளையர்களின் அட்டூழியங்களை எதிர்த்துப்போராடினார். அவரது பாதையில்இந்தியா தொடர்ந்து இனவேற்றுமையை ஒழிப்பதற்குப் போராடி வருகிறது.

### வெளியுறவுக் கொள்கை

அரசியல் மேதை ஜவஹர்லால் நேருவினால்



நேருஜி

அத்திவாரமிடப்பட்ட இந்திய வெளிவிவகாரக் கொள்கை இந்தியாவின் கௌரவத்தையும், தனித்தன்மையையும் பேணக்கூடியவகையில் அமைந்துள்ளது. சியாட்

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கதம்பம்

## சேரட்டும் ஒன்றாக!

கலப்பை பிடிக்கும் கை
கடும்பசியைப் போக்கும் கை
அகப்பை பிடிக்கும் கை
அடுப்படியை ஆளும்கை
பேனை பிடிக்கும் கை
பேதைமையை அகற்றும் கை
தங்கம் உருக்கித்
தரணியை உயர்த்தும் கை
எங்கள் கைகள்
எல்லாமே ஒருமித்து
செங்கோலைச் சிறாக்க
சேரட்டும் ஒன்றாக.

—சின்னத்தம்பி சதாசிவம்—

★

## நாங்களும் மனிதர்தான்!

இறைவா!
இந்நாட்டு—
இனவெறியர்கள்
எங்கள்—
கன்னத்தில்
அறைந்தபோதெல்லாம்
மறுகன்னத்தையும்
காட்டியே வந்தோம்.
ஆனால்—
58 முதல்
83 வரை
எம்மை
அழிக்கவே
தொடங்கிவிட்டார்கள்.
இறைவா!
உம்மை—
மறுதலிக்கின்றோம்
எம்மை—
மன்னியும்!
இப்போது
எங்கள்—
ஒரு கன்னத்தில்
அடிக்கும்போது
மறுகன்னத்தை
நாம்—
காட்டுவதில்லை
அவர்களின்—
இருகன்னங்களையும்
பதம் பார்க்கிறோம்.
இப்போது—
அவர்களுக்குப்—
புரிகிறது
நாங்களும்—
மனிதர்தான் என்று.

—வே. சண்முகராஜா

★

## உன்னிடம் வருவேன்!

அங்கமெல்லாம் நொந்தெல்லோ
அன்னையவள் பெற்றாள்
ஆராரோ பாடியெல்லோ
ஆறுதலும் தந்தாள்.

சிங்க(ள)த்தின் சிறுமை கண்டு
சீற்றம் நீ கொண்டாய்
சிறுத்தையின் உறுமலுடன்
சீர்ப்படுத்தப் போனாய்.

காடு மலை மேடெல்லாம்
கால் கடுக்க நடந்தாய்
காலத்தின் தேவை கண்டு
களம் நோக்கிச் சென்றாய்.

அனல்போன்ற விழிகளுடன்
அலைந்து நீ திரிந்தாய்
புனல் தாண்டிப் போர்முறைகள்
புதுவழியில் கற்றாய்,

மண்ணுக்காய் உன்னுடலை
மனமுவந்து அளித்தாய்
மறப்போரில் மானம் காத்து
மரணத்தை அணைத்தாய்,

இதயத்தை இழந்தும் நான்
இரும்பாக இருப்பேன் - எங்கள்
உதயத்தைக் கண்டபின்பே
உன்னிடம் நான் வருவேன்.

ஆக்கம் 'தமிழ்ச்செல்வி'

★

## விழித்திடு தமிழா!

குற்றம் கண்டு குறையைப் பேசி
களிக்கும் எண்ணம் -விட்டு
பற்றுக்கொண்டு நேச முடனே
பிணைந்து வாழ்ந்திடு

தூற்று கின்ற இதயம் கண்டு
தளர்வு கொள்ளாமல் - நீ
ஆற்றுகின்ற நல்ல தொண்டில்
அமைதி கண்டிடு

நாடு செல்லும் நிலைய றிந்து
நின்னை மாற்றியே - தமிழா
பாடு பட்டுச் சேர்க்கும் பொருளைப்
பகிர்ந்து உண்டிடு

பாயும் ஆற்று வேகம் உனது
செயலில் காட்டியே - இனியும்
வாயில் பேசி வீணே திரியும்
நிலைமை அகற்றிடு

மொழியுணர்வு மனதில் பெருக்கி
மேன்மை அடையவே - தமிழா
விழிப்புப் பெற்று வாழ்வை உயர்த்த
விழித்து எழுந்திடு.

செல்வி. ந. வான்மதி

★

# இப்படியும் ஒரு தடை....

சஞ்சீவி சிறுகதை

கோபுர வாசலின் வடக்கே அடர்ந்து வளர்ந்துள்ள வேப்பமரத்தின் கீழ் சிவசங்கர் தன் பெற்றோருடன் நின்றிருந்தான். காலை நேரம். வேப்பமர இலைகளுக்கிடையே கண்ணைப்பறிக்கும் பிரகாசத்துடன் சூரிய கிரணங்கள் புகுந்து வந்தன. மரத்தின் இலைகளும், தளிர்களும் சூரிய கிரணங்கள் பட்டு, அதே சமயம் காற்றில் சல, சல என்று ஆடி மெல்லிய ஓசை எழுப்பும் போது, இனந்தெரியாத சுகமும், நிம்மதியும் ஏற்படுவதை அனுபவித்தவாறுசிவசங்கரின் அப்பா இராமநாதனும், அம்மா கமலாம்பாளும் நின்றிருந்தனர்.

சிவசங்கர் பொறுமையிழந்து அடிக்கடி கடிகாரத்தைப் பார்ப்பதும், கோவிலின் முன் நீண்டு வளைந்து போகும் வீதியைக் கண்ணுக்கெட்டிய தூரம் பார்ப்பதுமாக இருந்தான்.

அவர்களை இன்னும் காணவில்லை.

எதிலும் ஒரு கட்டுப்பாடு, ஒழுங்கு, நேரம் தவறாமை ஆகியன கடைப்பிடிக்கும் வழக்கமுடைய அவனால் காத்துக் கொண்டிருப்பது வெறுப்பை ஊட்டுவதாக இருந்தது. மீண்டும் ஒரு முறை தெரு வீதியைப் பார்த்தான். அவர்களைக் காணவில்லை.

சேர்ட் பொக்கட்டினுள் கையை வைத்து சிகரெட் பக்கெட்டை எடுத்தவன், தான் நிற்பது கோபுரவாசல் என்ற ஞாபகம் வரவே, மீண்டும் அதனை வைத்து விட்டுத் தெருவீதியைப்பார்த்தான்.

இப்படியான நிலை ஏற்பட்டதற்கு அவன்தான் காரணம்.

கனடாவில் டாக்டராகப் பணிபுரியும் அவன், இரண்டு கிழமை லீவில் ஊருக்கு வந்ததும், கல்யாணத் தரகர்கள் அவன் வீட்டிற்குப் படையெடுத்தனர்.

ஒரேயொரு சாதகக் குறிப்பில் மட்டும் எல்லா அம்சங்களும் உத்தமமாக அமைந்தன. ''அவிட்ட நட்சத்திர மய்யா தவிட்டுப் பானையும் பொன்னாகும்'' என்று தரகர் மேலும் கூறி வைத்தார்.

பெண்ணின் போட்டோவையும் கொண்டு வந்த தரகர் அதைக் காட்டியபடி ''பெண்ணுக்குப் பெயர் உமா, உமாதேவி போலவே இருக்கிறாங்க'' என்றார்.

அழகு தேவதைபோல் இருந்தாள் உமா. சிவசங்கருக்குப் பிடித்து விட்டது.

இந்தச் சம்பந்தத்தையே எப்படியும் முடித்து விடவேண்டும் என்று இராமநாதனும், கமலாம்பாளும் தீர்மானித்தனர்.

தரகரிடம் கமலாம்பாள் சொன்னாள் ''உங்களை நம்பித்தான் தீர்மானிக்கிறோம். சாதி, குலம் கோத்திரமெல்லாம் விசாரிக்கத்தேவையில்லையல்லவா''

சிவசங்கர் இடைமறித்தான். ''இதோ பாரம்மா! உலகிலே இரண்டே இரண்டு சாதியிருக்கு. ஒன்று மனித சாதி மற்றது மிருக சாதி'' என்றான்.

மகனின் பேச்சைக் கேட்ட இராமநாதன் சிரித்தவாறே ''நல்லாய் சொன்னாய் சங்கர். ஆனால் இன்னும் இரண்டு சாதி இருக்கு'' என்றார்.

'அது என்னப்பா'' என்றான் அவலோடு.

ஒன்று' ஆண்சாதி; மற்றது பெண்சாதி'' என்று கேலியாகக் கூறியபடி மனைவியைப் பார்த்துச் சிரித்தார்.

'ஐயா, வீட்டில் வந்து பெண்ணைப் பாருங்கோ நாளைக்கு நல்ல நாள்'' என்று தரகர் சொன்ன போது சிவசங்கர் அதை விரும்பவில்லை.

வீட்டில் போய்ப் பெண்ணைப் பார்த்தபின் கல்யாணம் நிச்சயிக்கப் படாவிடில் அது பெண்ணைப் பாதிக்கும் எனக் கூறி கோவிலில் பெண்ணைப் பார்க்கலாம் எனச் சொன்னான். காலை எட்டு மணிக்கு கோவிலுக்குப் பெண்ணை அழைத்து வருவதாகவும் அதற்கான ஒழுங்குகளைப் பெற்றோருடன் செய்திருப்பதாகவும் தரகர் சொன்னார்.

எட்டரை மணியாகியும் அவர்கள் வரவில்லை. பொறுமையிழந்தான் சிவசங்கர். சலிப்போடு அப்பா இராமநாதனைப் பார்த்து 'கிளம்பலாமாப்பா' என்றான்.

தெருமுனையில் வந்து கொண்டிருந்த வெள்ளைக்காரரையே அவதானித்துக் கொண்டிருந்த இராமநாதன் 'இதோ வருகிறார்கள்' என்றார்.

அந்த வெள்ளைக்கார் கோபுரவாசலுக்கு எதிரே இருந்த தேர் முட்டியருகில் நின்றது. காரில் இருந்து இறங்கி ஓடி வந்த பெண் உமாவின் தந்தை தாங்கள் தாமதமாக வந்ததற்கு மன்னிப்புக் கேட்டார்.

அவர் கூறியது எதுவுமே சிவசங்கரின் காதிலோ, பெற்றோரின் காதிலோ விழவில்லை.

சௌந்தர்ய தேவதை போல் காரில் இருந்து இறங்கி அன்ன நடை போட்டுத் தாயின் பின்னால் வந்து கொண்டிருந்த உமாவையே அவர்கள் கண்கள் உற்று நோக்கின. கோல மயில் போல் எழிலாக வந்த உமாவைக் கண்ட அந்த ஒரு கண நேரத்தில் 'இவள் தான் என் மனைவி' என சிவசங்கர் தீர்மானித்துக் கொண்டான்.

காரிலிருந்து இறங்கித் தாயுடன் இவர்களை நோக்கி வந்த உமா சிவசங்கரின் பெற்றோர் காலில் விழுந்து வணங்கினாள். இதைச் சற்றும் எதிர்பாராத இராமநாதனும், கமலாம்பாளும் அவளை ஆசிர்வதித்தனர். அந்த நிமிடமே உமாதான் தன் மருமகள் எனக் கமலாம்பாள் தீர்மானித்தாள். இருவரும் சிவசங்கரைப் பார்க்க, அவனும் தன் சம்மதத்தைப்புன் முறுவலாலேயே தெரிவித்தான்.

இராமநாதன் உமாவின் தந்தையை நோக்கி 'எங்களுக்கும் பூரண திருப்தி, இன்றைக்கு நல்லநாள். இன்றைக்கே இந்தப் புனிதமான இடத்திலேயே கல்யாண எழுத்திற்கு நாள் வைச்சிடலாம்' என்றார்.

உமாவின் அப்பா மனம் பூரித்தவராக 'அப்படியே செய்திடலாம். அதற்கு முன் சீதன விடயங்களையும் பேசி முடித்திடலாம்' என்றார்.

இராமநாதனின் முகம் மாறியது.

'இதோ பாருங்கள் கல்யாணம் என்பது ஒரு பிணைப்பு. தெய்வீக பந்தம். அங்கே வியாபாரத்திற்கு இடமில்லை. நான் உங்கள் பணத்தையோ பொருளையோ வாங்கி அதற்கு ஈடாக என் மகனைத் தரவில்லை. அதனாலே சீதனம் என்ற பேச்சுக்கே இடமில்லை, நீங்கவிரும்பினால் உங்கள் மனத்திருப்திக்காக உங்கள்மகளுக்கு ஏதாவது கொடுக்கலாம். அதை நான் தடுக்கவில்லை' என்றார்.

இந்தப் பதிலை உமாவின் தந்தை எதிர்பார்க்கவில்லை. அவர் உணர்ச்சி வசப்பட்டுக் கண் கலங்கினார். 'நீங்கள் ஆயிரத்தில் ஒருவர். உங்கள் சம்பந்தம் இந்த முருகன் அருளால்தான் கிடைத்திருக்கு'' என்று இராமநாதனின் இரு கைகளையும் பற்றிப் பிடித்தார்.

இவ்வளவு நேரமும் மோகனச்சிலைபோல் நின்றிருந்த உமாவைக் கண் இமைக்காது பார்த்துக் கொண்டிருந்த சிவசங்கர் 'அப்பா இரண்டு கிழமைக்குள் பிளேட். இன்றே நாளை நிச்சயித்து விடுங்கோ' என்றான்.

பஞ்சாங்கம் இல்லாது எப்படி நாள் பார்ப்பது என்று யோசித்த உமாவின் தந்தை 'கொஞ்சம் இருங்கோ கோயில் குருக்களிடம் பஞ்சாங்கம் வாங்கி வர்றேன்' என்று சொல்லிவிட்டுக் கோயிலுக்குள் ஓடிப் போனார்.

அந்த நேரம் பார்த்துக் கோயில் மணி அடித்தது. 'நல்ல சகுனம்' என்றார் இராமநாதன்.

'முருகனுக்கு அர்ச்சனை பண்ணிட்டு வந்துடறோம்' என்று சொல்லிவிட்டு உமாவைக் கோயிலுக்குள் அழைத்துக் கொண்டு போனாள் அவள் தாய்.

தன் மகனுக்கு அழகும், படிப்பும், குணமும் கொண்ட பெண் மனைவியாக அமையப் போவதில் எல்லையில்லா மகிழ்ச்சியடைந்த கமலாம்பாள் 'பார்த்தீங்களா அந்தப் பெண்ணின் அடக்கத்தையும், பணிவையும். எங்களைக் கண்டதும் காலில் விழுந்து வணங்கினாளே!' என்றாள்.

சிவசங்கர் சிரித்தபடியே 'மாமியார் மெச்சிய மருமகள் உமா ஒருத்திதான் யாழ்ப்பாணத்தில்' என்றான்.

கமலாம்பாள் தொடர்ந்து சொன்னாள். 'படித்த கர்வம் கொஞ்சம்கூட இல்லை. சமையல் வேலை கூடச் செய்கிறாளே'

சமையல் கூடத் தெரியுமா? அதெப்படி உனக்குத் தெரியும்' சிரித்துக் கொண்டே கேட்டார் இராமநாதன்.

'வலதுகை பெருவிரலில் பிளாஸ்டர் ஒட்டியிருக்கு கவனிக்கலையா? காய்கறி நறுக்கும்போது ஏற்பட்ட காயம்' என்றாள்.

சிவசங்கர் இதைக் கேட்டுச் சிரித்தான். பின்பு 'அது ரோஜாச் செடியின் முள் குத்திய காயம் அம்மா' என்றான்'

'நீங்கள் இருவருமே தவறு. பென்சில் சீவும்போது பிளேட் வெட்டியது' என்றார் இராமநாதன்.

இவர்களின் கற்பனை உரையாடல் தொடருமுன்னே உமாவின் அப்பா பஞ்சாங்கத்துடன் வந்தார். கமலாம்பாள் கோயில் கும்பிடப் போனாள்.

பஞ்சாங்கத்தைப் பார்த்து நாள் நிச்சயித்துவிட்டுப் பொதுவாக உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது உமாவின் வலது கைப் பெருவிரலில் எப்படிக் காயம் ஏற்பட்டது என்று கேட்டார்.

இந்தக் கேள்வியைச் சற்றும் அவர் எதிர்பார்க்கவில்லை 'ஓ! அது சின்னக்காயம் யன்னல் கதவு நெரித்து விட்டது' என்றார்.

அப்போது பெண்கள் மூவரும் வெளியே வந்தார்கள்.

நல்ல முடிவு ஏற்பட்ட மனத்திருப்தியுடன் விடைபெற்றுக்கொண்டு சிவசங்கரும் பெற்றோரும் வீடு திரும்பினர்.

கமலாம்பாள் மீண்டும் அந்தக் கைவிரல் காயத்தைப் பற்றியே குறிப்பிட்டாள். 'அந்தக் காயம் தைக்கும் போது ஊசி குத்தியதாம். உமாவின் தாய் சொன்னார்' என்றாள்.

இராமநாதன் மகனைப் பார்த்தார். அவர் முகத்தில் அதுவரை நிலவிய மகிழ்ச்சி கலைந்தது.

'யன்னல் கதவு நெரித்தது என்று உமாவின் அப்பா சொன்னாரே' என்றார்.

கமலாம்பாளுக்கு முதன் முறையாகக் கோபம் வந்தது. 'இதென்ன பொய்யும், பித்தலாட்டமும். எதையோ ஒழிக்கிறார்கள். அந்த விரல் வழங்காதோ என்னவோ? கமலாம்பாள் குமுறினாள்.

'ஒரு சின்ன விஷயத்திற்கு இப்படிப் பொய் சொல்கிறவர்களை எப்படி நம்புவது' இராமநாதன் தெருவைப் பார்த்தவாறு தனக்குள் சொல்லிக் கொண்டார்.

'இவர்களைப் பற்றி தீரவிசாரிக்காமல் நிச்சயித்திருக்கப்படாது. இப்பவும் ஒன்றும் காலம் போய்விடவில்லை. நாளைக்குத் தரகர் வரட்டும்' என்றாள் கமலாம்பாள்.

(2)

நிச்சயமாய்ப் போன ஒரு விடயம் நிச்சயமற்ற நிலைக்கு வந்து விட்டது.

சிவசங்கர் ஒன்றும் பேசவில்லை. இது என்ன புதுத்திருப்பம் என எண்ணி மனம் குழம்பினான்.

வீட்டில் பெற்றோரை இறக்கிவிட்டுக் காரை எடுத்துக்கொண்டு நேரே பெண்ணின் வீட்டிற்குப் போனான்.

அப்போதுதான் கோயிலால் வந்த உமா வெளி விறாந்தையில் நின்றிருந்தாள்.

கார்க்கதவு சாத்தப்படும் சத்தம் கேட்டு கேட்டைப் பார்த்த உமா, சிவசங்கர் வருவதைக் கண்டு பரபரப்படைந்தாள்.

சிவசங்கர் 'பயப்படாதீர்கள். ஒரேயொரு விடயமாக வந்திருக்கிறேன்' என்று சொன்னவன் அவள் விரலில் பிளாஸ்டர் இல்லாதது கண்டு ஆச்சரியப்பட்டான்.

'கோயிலால் வந்தவுடன் கையில் இருந்த காயம் ஆறிவிட்டதா?' என்று கேட்டான்.

ஒன்றும் பேசாது மௌனமாக இருந்தாள் உமா.

'இதோ பார் உமா உனது விரலில் எப்படிக் காயம் ஏற்பட்டது, அல்லது காயம் உண்மையில் ஏற்பட்டதா என்பதை நான் தெரிந்து கொள்ள வேண்டும்? என்றான்.

அச்சத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்கள் பனித்தன. தான் செய்த ஒரு சின்ன விடயம் விஸ்வரூபம் எடுத்துவிட்டதே எனக் கலங்கினாள். பின் நடுங்கிய குரலில் 'எனக்கு நகம் கடிக்கும் பழக்கம் உண்டு. என்னையறியாது நகம் கடித்து விடுவேன். உங்கள் முன் நகம் கடித்து விடுவேன் என்ற பயத்தில் அப்பா, அம்மா இருவருக்குமே தெரியாமல் பிளாஸ்டர் ஒட்டினேன்' என்றாள்.

அவளின் குழந்தை முகமும், அதில் பிரதிபலித்த அச்சமும், ஏக்கமும் சிவசங்கரின் உள்ளத்தைத் தொட்டன.

'உமா மன்னித்துவிடு. தேவையின்றி உன் மனதைப் புண்படுத்தி விட்டேன்' என்று சொல்லியவாறு அவள் விரலைப் பற்றி உதட்டால் முத்தமிட்டுத் தெளிந்த உள்ளத்துடன் பெற்றோரைப் பார்க்கப் பறந்தான்.

அவன் பெற்றோரின் மனதில் ஏற்பட்ட காயத்தை ஆற்றப் பறந்து சென்றான். ✶

- வில்வம் பசுபதி -

# மல்யுத்த வீரனை வென்றது 'கசமுச'

ஒரு சமயம் கிருஷ்ண தேவராயரின் அரசவைக்கு டில்லியில் இருந்து அசகாய சூரன் என்ற ஒரு மல்யுத்த வீரன் வந்தான்.

மன்னருக்கு வணக்கம் தெரிவித்த அசகாய சூரன் ''மன்னர் அவர்களே உலகம் முழுவதிலும் உள்ள மல்லர்களை வென்று வெற்றிக்கொடி நாட்டியவாறு நான் வந்திருக்கிறேன். உங்கள் நாட்டில் என்னை வெல்லக்கூடிய ஆண்மை படைத்த மல்லர்கள் உண்டா?'' எனச் சவால் விடுத்தான்.

அசகாயசூரனின் கட்டுமஸ்தான தேகத்தையும் பயங்கர தோற்றத்தையும் கண்டு அஞ்சிய அரண்மனை மல்லர்கள் அவனுடன் போட்டி போடத் தயங்கி மௌனமாகத் தலைகுனிந்து கொண்டனர்.

மன்னருக்கு அந்தக் காட்சி பெரும் அவமானத்தைத் தந்தது.

திடீரென தெனாலிராமன் துள்ளி எழுந்தான்.

'மன்னர் பெருமானே இந்த மல்லனின் சவாலை நான் ஏற்றுக் கொள்கிறேன்' என்றான்.

மன்னன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். ஆனால் நோஞ்சானாக இருக்கும் தெனாலிராமனால் திடகாத்திர தோற்றத்துடன் உள்ள மல்லனை எவ்வாறு வெற்றி கொள்ள முடியும் என்பது விளங்கவில்லை.

மல்லன் அசகாயசூரனுக்கும் ஏற்பட்டது.

'வெறும் எலும்புக் கூடாக உள்ள நீயா என்னுடன் மல்யுத்தம்செய்து வெற்றி பெற முடியும். எனது ஒரு கைப்பிடிக்கு உனது சரீரம் தாக்குப் பிடிக்காதே?' என ஏளனமாக அவன் மொழிந்தான்.

தெனாலிராமனோ அட்டகாசமாகச் சிரித்தான்.

'மல்லனே. நீ கசமுச மல்யுத்த சாத்திரம் அறி




வாயா?' என்று கேட்டான்.

அப்படி ஒரு மல்யுத்த சாத்திரம் இருப்பதாக அசகாயசூரனுக்கு நினைவில்லை.

குழப்பம் மிகுந்தவனாக அவன் தெனாலிராமனை நோக்கி 'அப்படி ஒரு சாத்திரம் பற்றி நான் கேள்விப்படவே இல்லை' என்றான்.

தெனாலிராமன் அலட்சியமாகச் சிரித்தான்,

''இவ்வளவுதானா உன் மல்யுத்த அறிவு. உன்னைப்போன்ற அரைவேக்காட்டுக் காரனிடம் மல்யுத்தம் செய்யவே எனக்கு வெட்கமாக இருக்கின்றது. இது முற்றிலும் நரம்புவேலை. ஒரு மனிதனுடைய எந்த [illegible] அவன் உடலை எவ்வாறு பாதிக்கும் என [illegible] கற்றவன் அறிவான். இந்த மல்யுத்த முறைக்கு மிருக பலம் தேவையில்லை. ஒரு மெலிந்த தேகமுள்ளவனும் உன்னைப்போல கொழுத்த ஆளை எளிதில் வீழ்த்தி விடுவான். உனது முதுகில் உள்ள ஒரு நரம்பை நான் தொடுவதன் மூலமே உன்னைச் செத்து விழச் செய்துவிடுவேன். இன்று இரவு முழுவதும் நீ நன்றாக யோசித்துப் பார். கசமுச மல்யுத்த சாத்திரம் படித்த என்னுடன் மோத நீ தயார்தானா என்று தீர்மானித்து நாளை காலையில் அரசவையில் மன்னரிடம் கூறு நாளை மாலையே மல்யுத்த மேடையில் நான் உன்னை சந்திக்கின்றேன்'' எனக் கம்பீரமாகக் கூறினான்.

அசகாய சூரனின் முகத்திலே குழப்பமும் கலக்கமும் மேலாடியது.

மறுநாள் காலை தனது தீர்மானத்தை அறிவிப்பதாக அவன் கூறினான்.

டில்லி அசகாய சூரன் அன்று இரவே விஜய நகரத்தைவிட்டு ஓடிப் போய்விட்டான் என்ற தகவல் மறுநாள் காலை அரசவையில் இருந்த மன்னருக்கு வந்துசேர்ந்தது.

அரசவையில் அடக்கமாக அமர்ந்திருந்த தெனாலிராமனை அனைவரும் புகழ்ந்து பாராட்டினார்கள்.

மன்னர் தெனாலிராமனை நோக்கி'தெனாலிராமா கசமுச மல்யுத்த சாத்திரம் என்று சொன்னாயே அதை நீ எப்பொழுது கற்றுக்கொண்டாய்?' என்று கேட்டார்.

''மன்னாதி மன்னா அப்படி ஒரு சாத்திரம் இருந்தல்தானே அதைக்கற்றுக் கொள்ளமுடியும்?'' என்று சிரித்துக் கொண்டே கூறினான் தெனாலிராமன்.

''கசமுச மல்யுத்த சாத்திரம் என்று ஒரு பெயரைச் சொன்னாயே அது எப்படி?'' என்று மன்னர் விசாரித்தார்.

''அந்த நேரத்தில் என் வாயில் வந்த பெயர் அது. அசகாய சூரன் உண்மையிலேயே பெரிய மல்யுத்தவீரன். அவனுடன்நேரடியாகமோதி யாராலும் வெற்றிபெற முடியாது. அதனால் தான் அவனை ஏதாவது சொல்லிக் குழப்பமடையச் செய்து ஊரை விட்டே விரட்டவேண்டும் என்று தீர்மானித்தேன். நான் நடத்திய நகைச்சுவை நாடகந்தான் கசமுச மல்யுத்த சாத்திரம்'' என்றான் தெனாலிராமன்.

''எது எப்படியிருந்தாலும் எனது நாட்டின் கௌரவத்தை நீ காப்பாற்றினாய். அது பாராட்டப்படவேண்டிய விஷயம்''என மகிழ்ச்சியுடன் கூறிய மன்னர் தெனாலிராமனுக்கு விலைஉயர்ந்த பரிசுப்பொருள்கள் அளித்தார். ★

## பிழைக்கத்தானே வேண்டும்

வைத்திய கலாநிதி ஒருவரிடம் சென்ற நோயாளி ஒருவன் அவர் எழுதிக் கொடுத்த மருந்துகளை அவ்வைத்தியசாலையில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளாமல் வெளியிலுள்ள மருந்துக்கடையொன்றில் பணம் கொடுத்து வாங்கினான்.

இதை அவதானித்த அந்த டாக்டர் மருந்தை ஏன் வெளியில் வாங்கினாய்? என்று கேட்டதற்கு, 'கடைக்காரனும் பிழைக்கத் தானே வேண்டும்' என்று அந்த நோயாளி கூறினானாம்.

சிறிது நேரத்தில் அவன் வாங்கி வந்த மருந்து முழுவதையும் எடுத்து யன்னல் வழியே வீசினானாம். ஏன் அவற்றை வீசி எறிந்தாய்? என்று கேட்டதற்கு 'நானும் பிழைக்கத்தானே வேணும்' என்று படாரென்று பதிலளித்தானாம்.

இப்படிப் பல வைத்தியக் கதைகள் உண்டு. அக்கதைகள் அனைத்தையும் சொன்னால் இந்த நூலை விற்பனை செய்வது சங்கடமாகிவிடும். மருத்துவ நூல் வெளியீட்டு விழாவொன்றில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பலத்த மகிழ்ச்சி ஆரவாரத்துக்கிடையே சொன்ன நகைச்சுவைக் கதைஇது.

—நடனம்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பாதை மாறியபோது-" போராளி உருவாகிறான்

கவிஞர் காரை செ.சுந்தரம்பிள்ளை எழுதியுள்ள குறுங்காவியம், 'பாதை மாறியபோது' இது வரதர் வெளியீடாக வந்துள்ளது. இன்றைய ஈழத்து இளைஞனின் கதை என்று இக்குறுங்காவியம் விவரிக்கப்பட்டுள்ளது. அந்தக்கதை தான் என்ன?

பழனி ஒரு கடற்தொழிலாளி. "காரை நகரின் கடற்கரைதன்னிலே/சுட்டிவைத்த ஒரு குடிசையில்" வாழ்ந்து கொண்டிருந்தவன். அவனுடைய மனைவி கற்பி என்பவள். இவர்களின் பிள்ளை தருமன். இவனுடைய கதையைத் தான் கவிஞர் நமக்குச் சொல்லுகிறார்.

கடற்தொழிலாளியாகிய பழனி, தன் மகனும் அதே தொழிலில் இறங்கி ஒரு மீனவன் ஆவதை விரும்பவில்லை. 'பென்னம்பெரிய படிச்ச மனிசன்' ஆக அவன் வர வேண்டும் என்று கனவு காணுகிறான். பக்கத்து ஊரவராகிய நாகலிங்க உபாத்தியாயரின் வழி காட்டலிலே தருமன் கெட்டித்தனமாகப் படிக்கிறான். புலமைப் பரிசிற் சோதனையிலும், பின்னர் பத்தாம் வகுப்புப் பரீட்சையிலும் தருமனுக்குக் கணிசமான வெற்றி கிட்டுகின்றது. நாகலிங்க உபாத்தியாயரின் உதவியினால், பெரிய கல்லூரி ஒன்றில் அனுமதி பெற்று உயர் கல்வியைத் தருமன் தொடருகிறான்.

இதற்கிடையில் ஒரு நாள் தன் தொழிலின் பொருட்டுக் கடல்மேற் சென்ற பழனி வீடு திரும்பவில்லை. பேரிரைச்சலோடு வீசிய புயற் காற்று, தோணியைக் கவிழ்த்துவிடுகிறது.

தந்தை மறைந்த பிறகும் சில காலம் ஆசிரியர் நாகலிங்கம் தருமனுக்குப் புத்திகூறி வழி காட்டுகிறார். தருமனின் தாயும் பல இடைஞ்சல்களின் இடையிலும் மகனின் படிப்பிலே கண்ணும் கருத்துமாய் இருக்கிறாள். தருமனும் நன்றாகப் படித்து 'ஏ.எல்' சோதனையில் நிறையப் புள்ளிகள் பெறுகிறான். ஆனால் 'தரப்படுத்தல்' முறைமை புகுத்தப்படுகிறது.

"ஊக்கமாய்ப் படித்த பேர்கள்/உயர் புள்ளி எடுத்தபேர்கள் / ஆக்க பூர்வத்திறனோடு / அறிவினைப்பெற்றநல்லோர்" பலர் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களில் தருமனும் ஒருவன். இரண்டாம் தடவையும் சோதனை எடுத்துப்பார்க்கிறான். முடிவுகள் நல்லனவாய் இருந்தபோதிலும் தரப்படுத்தல் முறைமை அவனைத் தள்ளிவிழுத்திவிடுகிறது.

இந்த முறைகேட்டை எதிர்த்து மாணவர்கள் இயக்கம் நடத்துகிறார்கள். கோஷங்களும் ஊர்வலங்களும் கூட்டங்களும் தீர்மானங்களும் என்று நடவடிக்கைகள் அமளிதுமளிப்படுகின்றன. ஆனால், பலன் தான் பூச்சியம். படிப்புலகின் கதவுகள் பலர் என்று சாத்தப்படுகின்றன.

தருமன் தனது தந்தையின் தொழிலாகிய மீன் பிடிப்பில் ஈடுபடுகிறான்.

இதற்கிடையில், வடிவேலன் என்னும் ஏஜென்ற் கற்பியை அணுகித் 'தூண்டில் போடுகிறான். இருபதினாயிரம் ரூபா தந்தால், தருமனை அரேபியாவுக்கு அனுப்பிவைக்கலாம் என்று ஆசை காட்டுகிறான். அங்கே

சஞ்சீவி நூல் வரிசை

போனால், ஆண்டொன்றுக்கு இலட்சம் ரூபா வருமானம் கிடைக்கும் என்று சொல்லுகிறான். கற்பியும் தன்னுடைய நகைநட்டுக்களையும் சொத்துக்களையும் விற்றுப் பணந்திரட்டி வடிவேலனிடம் ஒப்படைக்கிறாள். ஆனால், வடிவேலனோ மோசடிக்காரன். காசுபோனதே தவிர, காரியம் கைகூடவில்லை. தருமன் கள்ளக் கடத்தலில் ஈடுபடுகின்றான் என்று பொய்க்குற்

**- இ. முருகையன் -**

றஞ்சாட்டிப் பொலீசிலே காட்டிக்கொடுக்கிறான். வடிவேலன். தருமன் தான் செய்யாத குற்றத்துக்காகக் கைதுசெய்யப்படுகிறான்.

அம்பலவாணர் என்னும் அப்புக்காத்தின் பரோபகார சிந்தையினால், தருமனுக்கு விடுதலை கிடைக்கிறது. 'அம்பலவாணர் அவன் துயருணர்ந்து / காவல்நிலையம் கடிதினில் சென்று/ உண்மையை விளக்க உயரதிகாரி / நன்றெனக் கூறி நல்கினர் விடுதலை" என்பன கவிஞரின் வரிகள், சற்றுச் சுலபமாகவே இந்த விடுதலை கிடைத்துவிடுகிறது. நம் புவது கொஞ்சங் கடினந்தான்.

விடுதலை பெற்ற தருமன் அம்பலவாணரின் ஆலோசனைப்படி முத்தையன்கடடுச்குக் கமஞ் செய்யப்போகிறான். நல்ல பலன் கிடைக்கிறது. தோட்டத் தொழிலில் ஈடுபடுபவர்கள்மேன்மை பெறுகிறார்கள். ஊரே விழாக்கோலம் பூணுகிறது, கேளிக்கைகள், கொண்டாட்டங்கள் நடக்கின்றன.

இதற்கிடையில் மாலினி என்னும் ஓர் இளம்பெண்ணை அறிமுகப்படுத்துகிறார், கவிஞர். இவள் தான் இந்தக் குறுங்காவியத்தின் நாயகியோ என்று நாம் நினைக்கத் தொடங்குகிறோம். அவளுக்கும் தருமன் மீதும் அவனது சமூகப் பணிகளின் மீதும் ஒரு கவர்ச்சி உண்டாகிறது. ஆனால் அந்த நாட்டம் வளர்ச்சி காண்பதற்குத் தருணங்கள் கிடைக்கவில்லை. மாலினி என்னும் பாத்திரத்தை மிகவும் நாகரிகமாகக் கையாண்டுள்ளார், கவிஞர்.

அரசின் இறக்குமதிக் கொள்கை மாறுகிறது. கமஞ் செய்தவர்கள் நட்டமடைகிறார்கள். அத்துடன் படையினரின் அட்டகாசங்கள் அதிகரிக்கின்றன.

"அதே சமயம் ஏமாற்றுக்கார ஏஜென்ற் வடிவேலனை யாரோ கொலை செய்து விடுகிறார்கள். இந்தக் கொலைக்காகத் தருமனையும் சந்தேகித்த காவற் படையினர் தருமன் வீட்டுக்கு வந்து, அவனைத் தேடிவிட்டுப் போகிறார்கள். தருமன் வீட்டுக்கு வர, அவன் தாய் இதை அவனிடம் சொல்லி, எங்கேயாவது தப்பிஓடிவிடும்படி சொல்கிறாள்."

ஆனால் தருமனோ போராளி ஆகிறான். அன்னையின் ஆசியும் அவனுக்குக் கிடைக்கிறது. தருமனின் தாய் மறைந்த பிறகுங் கூட, அவளுடைய தரும ஆவேசம் அவனைப் பற்றிக் கொள்ளுகிறது.

இது தான் குறுங்காவியத்திற் கூறப்படுகிறது.

இளைஞர்கள் போராளிகள் ஆவதற்குக் காலாயமையும் ஏதுக்களையும் (6ஆம் பக்கம் பார்க்க)

# குறிஞ்சிக் குமரன் - நல்லூர் முருகன்

முருகனை முத்தமிழோன், தமிழ்ப்பெருமாள், தமிழன், தமிழிறை என்றெல்லாம் நம்மவர்கள் போற்றி வணங்கியுள்ளார்கள். இயற்கையில் தென்பட்ட இறைவன் முருகனே. மானைத் தெரிய வைத்து பின்பு தன்னைத் தெளிய வைத்தானே சிவன், என்றும் எண்ணத் தோன்றுகிறது. இயற்கை அழகை முருகனைக் கண்ட முன்னோர்-பின்னோர் முன்னேற்றத்திற்கு முருகவழிபாட்டை நெறிப்படுத்தினார்கள். நாம் படித்த படிப்பும் நமது அறிவும் வேலவனான முருகன் தானாக வந்து தந்ததினாலே அவனுடைய திருநாமத்தை நாக்கிலே நடமாட விடுங்கள் என்று கூறினார்கள். "நாமே நடவீர் நடவீர் இனியே" என்பது அருணகிரிவாக்கு.

தமிழ்; எழுத்து சொல் ஆகியவற்றுக்கு மட்டுமல்லாது பொருளுக்கும் இலக்கணம் சொன்ன தொல்காப்பியர் நாலு வகையான நிலங்கள் பற்றியும் அந்நிலங்களில் வாழும் மக்கள் வாழ்க்கை குறித்தும் கூறியுள்ளார். நான்கு வகைநிலங்களை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப்பகுத்து அந்த நிலங்களுக்குரிய கடவுள் பற்றியும் காட்டியுள்ளார். முதல்நிலமாக அவர் எடுத்துக்கொண்ட மலையையும் மலையோடு கூடிய பகுதியையும் குறிஞ்சி என்னும் பெயரால் அழைத்தார். அக்குறிஞ்சி நிலமக்கள் வணங்கிய கடவுளாக முருகனைக் குறித்தார்.

நான்குவகை நிலங்களில் மனிதஇனம் மலை நிலத்திலேயே தனது வாழ்க்கையைத் தொடங்கிப் பின்னர் முல்லை, மருதம், நெய்தல் முதலிய நிலங்களுக்கு வாழச் சென்றிருக்க வேண்டுமென்பது அறிஞர்களின் கருத்தாகும். இக்கருத்தின் அடிப்படையில் முதல் நிலமாகிய குறிஞ்சியில் கடவுளாக வணங்கப்பட்ட முருகனே மக்கள் கண்ட முதற் கடவுளாக வேண்டும். மலைக் கடவுளை குறிஞ்சிக்கிழவன், மலைக்கிழவோன் என்னும் சிறப்புப் பெயர்களால் அழைத்திருக்கிறார்கள் சேந்தோன், கந்தன், செங்கோட்டு வெற்பன், வேல்வேந்தன், வள்ளிகாந்தன், கடம்பன் முதலிய பெயர்களும் முருகனுக்கு உண்டு. இவற்றோடு குகன், விசாகன், சுப்பிரமணியன், கார்த்திகேயன், சண்முகன். சரவணபவன் எனவும் பல நாமங்களால் நமது முருகன் அழைக்கப்பட்டு வணங்கப்படுகின்றான். ஆதலின் முருகனே முழுமுதலின் முதல் வெளிப்பாடாகும்.

**அருணகிரியார்**

முருகன் அழியா அழகும், முதிரா இளமையும் இயற்கை மணமும் கடவுட் தன்மையும் மிக்கவன். இவனை வழிபடுபவர்கள் மேற்குறித்த இயல்பினராய்த் திகழ்வார்கள். முருகனை நெஞ்சக்கன கல்லு நெகிழ்ந்துருக நினைந்து நினைந்து வழிபடுபவர்கள் இளமையுடனும், அழகுடனும், சுகந்த மணத்துடனும், சுத்த சித்தத்துடனும், கடவுட் தன்மையுடனும் காட்சி தருவார்கள். முதுமையாயிருப்பவர்களும் முருகவழிபாட்டால் இளமைநலம் பெற்றிருக்கிறார்கள். அருணகிரிநாதர் வழிபாடு இதற்கு எடுத்துக்காட்டாகும். முதுமையும் நோயும் முற்றிய அருணகிரி இளமை அழகனான முருகபக்தனானதும் இளமையும் இன்பமும் கிட்டி அனுபூதியடைந்தார். அவருடைய அலங்கார வாழ்வில் கந்தர் அலங்காரமும் அனுபூதி நிலையில் கந்தரனுபூதியும்



தோன்றின. திருந்திய நெஞ்சால் வழங்கிய திருப்புகழ் அமிர்தமாய் அனைவர்க்கும் உதவுகின்றது.

வழிபாட்டிற்கு வயது கிடையாது. அறிவு தெரிந்ததும் ஆண்டவனை எண்ணத் தொடங்கிவிட வேண்டும். அவன் விருப்பத்திற்கு மாறாக நினைக்கவும் சொல்லவும் செயல்படவும் முயலக்கூடாது. ஒவ்வொரு கணமும் கடவுள் என்ன நினைப்பார் என்ற எண்ணம் எழவேண்டும்.

அலையும் நெஞ்சை அறுமுகச் செவ்வேளின் அடிகளுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும். விதியின் கொடுமைகளின் போது 'என்னே விதியின் பயன்' என்று பன்னிருகையானைப் பணிந்து கேட்டு சஞ்சலங்களை அகற்ற வேண்டும்.

இன்றைய யுகம் கலியுகம். கலியுகத்தின் கடவுள் கந்தப்பெருமானே. கலியுகத்தின் வாழ்க்கை வழிபாட்டு வாழ்க்கை— வணக்க வாழ்க்கை. துவாபர யுகத்தில் யாக வாழ்க்கையும் திரேதா யுகத்தில் தான வாழ்க்கையும் கிருதயுகத்தில் ஞான வாழ்க்கையும் இருந்திருக்கிறது. நம்முடைய இந்த யுகத்தில் கிடைத்துள்ள பக்தி வாழ்க்கையை பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஞானத்திற்கும், தானத்திற்கும், யாகத்திற்கும் தேவையான முயற்சியோ செலவோ சிரமமோ இல்லாத இலகுவான; எல்லா நேரங்களிலும் செய்யக் கூடிய பக்தி வாழ்க்கையும் கலியுகவரதனை கந்தவேளின் வழிபாடும் நமக்குக் கிடைத்திருப்பதை எண்ணி மகிழ வேண்டும்.

**வேல் வழிபாடு**

குறிஞ்சிக் குமரனை முருகனே நல்லூர் வேலனாய் எழுந்தருளி நிற்கின்றான். வேலை வணங்குவதை வேலையாகக் கொள்ள வேண்டும், என்று செவ்வந்திப் புராணம் செப்புகின்றது.

வேல் என்றால் எல்லாவற்றையும் வெல்லுவது என்று பொருள். எல்லாவற்றையும் வெல்லக்கூடியது எது? அறிவு அந்த அறிவையும் ஆற்றலையும் தருகின்ற மகாசக்தியே வேல். சக்திவேல் என்

**சமயம்**

பது சமுதாய வழக்காகியும் உள்ளது. அறிவு ஆயுதமாகி ஆண்டவனை ஆவாகனம் பண்ணி பயன் விளைவிக்கும் பாங்கு தமிழர் சமயத்தில் தனித்தன்மையாய் சிறப்படைந்துள்ளது.

நல்லூர் மண்ணில் வேற்கோட்டமமைத்து நம்மை வணங்க வைத்த தொண்டர்தம் பெருமை நினைந்து மகிழத்தக்கது. வேல் வைத்து வணங்கிய கோயில்கள் குறித்து சிலப்பதிகாரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. காவிரிப்பூம்பட்டினத்தில் வேற்கோட்டம் என்ற கோயில் இருந்ததாக சிலம்பு கூறுகிறது. யாழ்ப்பாணத்து நல்லூர் வேற்கோட்டம் மருவுமடியார்கள் மனதில் பதிந்து நாளும் பொழுதும் பக்திப்பயிர் வளர்த்ததால் இக்கலியுகத்தின் வாழ்வியல் முறை வளமாக அமைய உதவுவது ஒரு சமய வரலாற்றுப் பரிமாணமாகும். ★

**- புலவர் ஈழத்துச் சிவானந்தன் -**

# உலகை ஒன்றாய்ப் பார்த்த புலவர் எச். ஜி. வெல்ஸ்

இங்கிலாத்தின் மிகப்பெரும் புலவர் எச். ஜி. வெல்ஸ். அவர் எழுத்துக்கும், பேச்சுக்கும் உலக நாடுகளில் பெருமதிப்பிருந்தது. தற்கால உலகத்தைப்பற்றி அவர் பேசிய பேச்சுக்கள் தீர்க்க தரிசனம் மிக்கவை.

மிகவும் பிரசித்தி பெற்ற இந்த அறிஞரின் கடைசிக்காலம் கவலையளிக்கக்கூடியதாக அமைந்தது. 1946ம் ஆண்டு ஆகஸ்ட் 13ந் திகதி தனியாக இருக்கும் போதே மரணம் அவரைத் தழுவியது. இறக்கும் போது அவருக்கு வயது எண்பது.

இறப்பதற்கு முன் 1930 ம் ஆண்டளவில் அவர் எழுதும் எழுத்தையும் வானொலியில் பேசும் ஒவ்வொரு சொல்லையும் உலகம் படித்தும் கேட்டும் இன்புற்றது.

பகுத்தறிவு வாதியாக இருந்த வெல்ஸ், நூற்றைம்பதிற்கு மேற்பட்ட நூல்களை எழுதினார்.

இந்த மேதையின் இறுதி யாத்திரையில் சில குறிப்பிட்டபெரியவர்கள் கலந்து கொண்டனர்.

இல்வாழ்வில் இன்பமில்லை; உடல் நிலையும் தளர்ந்து விட்டது. அவரது உற்றாரும் அவரைக் கவனிக்கவில்லை.

இவரது நூல்களில் மிகச் சிறந்தது 'வரலாற்றின் சுருக்கம்' என்பதாகும். உலகிலுள்ள மனித சமுதாயத்தைக் குறிக்கோளாகக் கொண்டே வரலாற்றைப் படிக்க வேண்டும். கற்பிக்க வேண்டும் என்பதே இவர் எழுதியதன் கருத்தாகும். இவரது நாவல்களிலோ நகைச்சுவை மிகுந்திருக்கும். அவர் எடுத்துக்காட்டும் நகைச்சுவைக்குப் பின்னால் அறிவுரைகள் ஒளித்துக் கொண்டிருக்கும். இவர் மதவாதியுமல்லர்; அரசியல் வாதியுமல்லர். லண்டன் பகுத்தறிவுச் சங்கத்தில் பல ஆண்டுகள் தலைவராக இருந்து பணி

**புத்தொளி**

யாற்றியவர். அவர் காலத்தில் பேர்ட்ரன்ட் ரஸல், பெர்னாட்ஷா என்போர் வாழ்ந்தனர். இவர்கள் வெல்ஸின் நண்பர்களாகவும் விளங்கினர்.

ஏழ்மையிலிருந்த வெல்ஸ் விஞ்ஞானத் துறையில் படித்துக் கல்லூரி பட்டத்தையும் பெற்றார். பின்னர் எழுத எண்ணினார். எழுதிக் குவித்தார். தனது நாற்பதாவது வயதிலேயே உலக கவனத்தைக் கவர்ந்த வெல்ஸிற்குப் பணமும் புகழும் போட்டி போட்டுக் கிடைத்தன.

பெண் உரிமைக்காக வாதாடிய ஆங்கில நூலாசிரியர்களில் வெல்ஸிற்குச் சிறப்பான இடமுண்டு. எழுத்தாளர்களின் நூல்கள் எல்லாம் சிறந்தனவாக இருப்பது அபூர்வம். ஆனால் இவர் எழுதிய நூல்கள் அனைத்தும் முதல் தரமானவை எனக் கணிக்கப்பட்டுள்ளன,

இவர் பத்திரிகைகளுக்கு எழுதும் கட்டுரைகளுக்கு ஆயிரம் சொற்களுக்கு நூறு பவுண் வீதம் (ஒரு சொல்லின் விலை 1½ ரூபாய்) ஊதியம் பெற்றார். "பிரிட்லிங்" என்ற நூலுக்கு அமெரிக்கர் மூலம் 20,000 ம் பவுண் கிடைத்தது. "பெல்லக் மறுக்கிறார்" என்ற ஒரு நூல் மட்டும் 20 லட்சம் பிரதிகள் விற்பனையாகியது. இந் நூலின் பல பதிப்புகளின் மூலம் வெல்ஸுக்குக் கிடைத்த பணம் 60,000ம் பவுண்.

ஆங்கில எழுத்தாளர்களில் எச். ஜி, வெல்ஸ் தனியிடம் பெற்றாராயினும் இறுதிக் காலத்தில் அவர் அனாதையாகவே உயிர் நீத்தார். ★

# பிரசாந்தி நிலைய முன்றிலில் காத்து நிற்கிறாள் வில்மா

தான் அன்று சென்ற இடங்களை எல்லாம் நினைவு படுத்தினாள். எங்கும் அந்த மோதிரத்தை வைத்ததாக நினைவு வரவில்லை. திரையில் ஓடும் படமும் முன்பே பார்த்தது. குழம்பிய நிலையிலுள்ள வில்மா தன் சினேகிதியை அழைத்துக் கொண்டு கருணை இல்லத்திற்கு திரும்புவதற்கு எண்ணங் கொண்டாள்.

அப்பொழுது கொட்டகைக்குள் ஒருவித காற்று வீசிற்று. விமலாவின் தோல்பையிலிருந்து நீல ஒளிக்கதிர் பளிச்சிட்டு தோல்பைக்குள் பாய்ந்ததை வில்மா அவதானித்தாள். அவள் மனதிற்குள்ளும் 'இதோ நீ கேட்ட தெளிவான அடையாளம்' என்ற குரல் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டிருந்தது.

தோல் பையைச் சட்டென எடுத்து, பையுக்குள் தன் விரல்களை விட்டாள். மோதிரமொன்று இருப்பதை உணர்ந்தாள். மோதிரம் சற்றுச் சூடாக இருந்தது. மோதிரத்தை உடன் வெளியே எடுத்தாள். அந்த அரை இருட்டிலும மோதிரத்திலுள்ள கல்லிருந்து பிரகாசமான நீல ஒளி கண்ணைக் கூசச் செய்தது.

இதை அவதானித்த வில்மாவின் சினேகிதி 'ஆ இந்த மோதிரம் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது.?' என்று வினவினாள்.

ஆச்சரியத்துடன் இருவரும் கொட்டகைக்கு வெளியே வந்து அதிசய மோதிரத்தை வெளிச்சத்தில் உற்று நோக்கினர். கல்லில் ஒளி பட்டதும் அதன் பிரகாசம் மேலும், மேலும் வளர்ந்து கொண்டே இருந்தது. வில்மா தவறிவிட்டதாகக் கருதிய அதே மோதிரத்தில் அவள் என்றுமே காணாத ஒளி வடிவம் பொருந்திய புத்தப்புதிய நீல நிறக்கல் பதிக்கப்பட்டிருந்தது. அந்த அழகிய கல்லினால் மோதிரம் பொலிவுற்று விளங்கியது.

மோதிரத்தைப் பிரசித்திபெற்ற நகை வியாபாரியிடம் காட்டிக் கல்லின் மதிப்பை அறிய ஆவலாயிருந்தனர். கல்லைப் பரிசோதித்த நகை வியாபாரி 'இது ஒரு நல்ல இனம். ஆயிரம் டொலருக்குமேல்பெறும்' என்று விலை மதித்தார்.

வில்மாவின் சினேகிதியால் இதை நம்பமுடியவில்லை. கண்ணாடிக்கல் எவ்வாறு நவரத்தினக் கற்களில் ஒன்றாகும்? இன்னும் ஒரு நகைவியாபாரியின் அபிப்பிராயத்தையும் அறிய வேண்டி



...னர். வில்மா மோதிரத்தை நகை வியாபாரியிடம் கொடுக்கும்போது கல்லில் ஒரு நிற பேதம் ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாசமும் கூடி இருந்தது. கல்லைப் பல பரிசோதனைகளுக்கு உட்படுத்திய பின் 'இது விலையுயர்ந்த நீலக்கல். இது ஆயிரத்தி ஐந்நூறு டொலர்களுக்கு மேல் பெறும்' என்றார்.

வில்மாவும் சிநேகிதியும் கருணை இல்லம் போகும் வழியில் பிறிதொரு நகைவியாபாரியையும் அணுகினர். கல்லின் நிறத்தில் அடிக்கடி மாற்றம் ஏற்படுவதையும் அவதானித்தனர்.

'இது வைரக்கல். கைதேர்ந்த ஒரு தொழிலாளியால் மிகவும் திறம்பட வெட்டப்பட்டுள்ளது. ஆயிரத்து ஐந்நூறு டொலர்களுக்கு மேல் மதிக்கலாம்' என்றார்.

பாபாவின்மேல் பூரண நம்பிக்கை வில்மாவிற்கு ஏற்பட்டது. அன்று

**- சத்தியா -**

முதல் அவளுக்கு அவரின் நினைவாகவே இருந்தது. அவரை நேரில் கண்டு வணங்கி அவரின் ஆசீர் ...

... துடித்தாள். சாயீசன் தன் தடைகளை அகற்றிக் கூடிய சீக்கிரம் தனக்குப் பிரசாந்தி நிலையத்தில் தரிசனம் அளிப்பார் என்று திடமாக நம்பியிருந்தாள்.

கருணை இல்லத்தில் வியாதியால் பீடிக்கப்பட்டு வில்மாவின் பராமரிப்பால் சுகப்பட்டு வெளியேறியவர்கள் அனேகர். அவர்கள் தங்கள் வணக்கத்தையும் மரியாதையையும் செலுத்துவதற்கு அங்கு அடிக்கடி வருவார்கள். இந்த வகுப்பைச் சேர்ந்த இரண்டு சிநேகிதர்கள் ஒரு பிற்பகல் வில்மாவைச் சந்திக்க வந்தார்கள். அவர்களை அன்புடன் வரவேற்று அமல் வைத்தாள். அவர்களிர ஒருவர் 'அம்மா, கருணை இல்லத்திலை வைத்தியத்திற்கும் பராமரிப்பிற்கும் சேர்க்கப்படுபவர்கள் எவரிடமும் நீங்கள் கால் அணா கூட ஏற்பதில்லை என்று எங்களுக்கு நன்கு ...

ஆனால் நாங்கள் இருவரும் ஈராயிரம் டொலர் கொண்டுவந்துள்ளோம். இப்போ உங்கள் செலவிற்குப் பணம் தட்டுப்பாடு இருப்பது போல் நாங்கள்விளங்குகிறோம். ஆகையால் இந்தப் பணத்தைத் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும். இதை நாங்கள் நன்கொடையாக உங்களுக்கு வழங்கவில்லை. உங்களுக்கு எப்ப தர முடியுமோ அப்போது நாங்கள் பெற்றுக் கொள்ளுகிறோம். வட்டி என்ற பேச்சுக்கே இடமில்லை. உங்கள் பராமரிப்பில் நாங்கள் இருவரும் நல்ல திடகாத்திரமாக வாழ்கின்றோம். பிணத்திற்கும் தட்டுப்பாடில்லை'

தொலைபேசியில் குறிப்பட்ட தொகையும் ஈராயிரம் டொலர்கள். இவர்கள் கொண்டு வந்ததும் அதே தொகை அவர்களிடம் பணத்தைப்பெற விருப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை மரியாளின் சிறப்பினை அழகாய்ப் பாடிய கவிவளம்

"ஞாயிறுவைப் போர்த்தபிராமணத்தியாளே
நளின கலைத்திங்களின் செம்படத்தியாளே
சேயர் செகமீட்பி எனச் செவ்வாயாலே
தினந்துதிக்கும் நசர நாடாத்தியாளே
தூய அற்புதன் கருணைக் குசத்தியாளே
துலங்கு புவியாளன் கோமாட்டியாளே
ஆயவெள்ளி முடிபுனை அம்பரத்தியாளே
அடியனுக்கும் சனி அகற்றி ஆளுவாயே!"

இப்பாடலின் பொருள் கிழமையின் பெயரும் சாதிப்பெயரும் எவ்வாறு தேவ அன்னையின் புகழ்பாடப் பொருந்துகின்றன என்பதை எடுத்துரைக்கும் ஞாயிறுவைப் போர்த்த பிராமணத்தியாளே என்பதனால் சூரியனை ஆடையாக அணிந்தவளும் தூய ஆவியின் நேசபத்தினியுமாவதேவ தாயே என்று பொருள். குலத்திலே உயர்ந்த குலத்தவர்கள் பிராமண குலத்தவரே. மனுக்குலத்தில் உதித்த பெண்களுக்குள்ளே மரியாள் உயர்ந்தவள் - சிறந்தவள் என்பதனாலே பிராமணத்தியாளே என்றார்.

வாரத்தின் இரண்டாம் நாளான திங்களினால் தேவஅன்னை புகழப்படும் அழகு உவமை நயம் மிக்கது. சந்திரனை தனது பாதத்தினாலே மிதிக்கின்றவள் மரியாள் என்ற பொருளைத் தருவதாய் இவ்வடி அமைந்துள்ளது. கலைத்திங்களின் செம்படத்தியாளே என்றஇவ்வடியில் வரும் 'செம்படத்தி' என்பது சாதியைக் குறிப்பதாயமைந்துள்ளது. மேலும் சிவந்த பாதங்களை உடையவள் என்பது அதன் மற்றொரு பொருளாகும்.

மூன்றாவது நாளான செவ்வாய்க்கிழமையை ''சேயர் செகமீட்பி எனச் செவ்வாயாலே'' என்றுவரும் அடியில் வைத்திருப்பதும்



தொடர்ந்து நசர நாடாத்தியாளே என்பதனால் நசரேத்து ஊரவளான மரியாளே மக்களாகிய நாம் எமது சிவந்த வாயாலே உம்மை அழைக்கின்றோம் என்று செவ்வாய் என்பதற்குச் சிவந்தவாய் என்று விளக்குகிறார் புலவர். நசர நாடாத்தியாளே என்பதில் நாடார் என்ற சாதிப்பெயர் மறைந்து நிற்பதும் அறிதற்பாலது.

புதன்கிழமை பின்வரும் அடியில் மறைந்திருப்பதைக் கவனிக்கலாம். தூய அற்புதன் கருணைக் குசத்தியாளே என்றுவரும் அடியில்

**இவ்வார சம்பவம்**

புதன்கிழமை மறைந்திருக்கின்றதே. அற்புதனாம் இயேசுவின் கருணையைப் பெற்றுத்தரும் வல்லமை பெற்றவளே என்பதுதான் அதன் நேர்ப்பொருளாகும். இங்கும் 'குசத்தி' என்ற சாதிப்பெயர் ஒளித்திருப்பதைக் காண்க.

ஐந்தாம் நாளாகிய வியாழன் அடுத்த வரியில் மறைந்திருக்கின்றதை அவதானிக்கலாம். ''துலங்கு (பு)வியாளன் கோமாட்டியாளே என்ற வரியைப் பிரித்துப்படித்தால் இது புரியும்.

> ஆவணித்திங்கள் 15 ஆம்நாள் கத்தோலிக்க மக்கள் அன்னை மரியாளின் விண்ணேற்ற விழாவைக் கொண்டாடுகிறார்கள் அந்த அன்னையின் சிறப்புக்கள் இப்பாடலில் விளங்குவதைக் காண்க.

கோமாட்டி என்றசொல் சாதியைச் சுட்டி வருவதையும் நோக்கலாம். புவியை ஆளுபவனாகிய இறைவனின் நேசபத்தினியே என்பதுதான் இவ்வரியின் பொருளாகும்

ஆய வெள்ளி முடிபுனை அம்பரத்தியாளே என்ற வரியிலே ஆறும் நாளாகிய வெள்ளிக்கிழமையின் பெயரும் அம்பரத்தி என்பதில் பரதகுலப் பெயரும் சுட்டப்படுவதைக் காணலாம். பன்னிரு நட்சத்திரங்களை முடியாகச் சூடிய அன்னையே என்ற பொருளை இவ்வடி எமக்கு விளக்கும்.

ஏழாம் நாளாகிய சனிக்கிழமை ஈற்றடியில் அடியனுக்கும் சனி அகற்றி ஆளுவாயே என்று வருவதில் மறைபொருளாய் நிற்பது கண்கூடு. சனி என்பது நாளையும், குறை, அல்லது தீமை என்பதையும் குறிப்பதாயமைந்திருக்கின்றது. அம்பரத்தி என்றால் மோட்சத்தில் உறைபவளே என்பது நேரான பொருள் என்று உணரப்பாலது.

இவ்வாறு காவலூர் கவிஞர் ஞா. ம செல்வராசா தம் சொல்வளத்தால் அன்னை மரியின் இலட்சணங்களை வர்ணித்துக் கவிதைத் திறனை வெளிக்காட்டி உள்ளார். அவரது சொல் அலங்காரத்துக்கும், இரு பொருள் தரும் சொற்பிரயோகத்துக்கும் இப்பாடல் சிறந்த எடுத்துக்காட்டாய் அமைந்திருக்கக் காணலாம், ★

எஸ். எம் ஜே.

# கால்நடைகளைத் தாக்கும் தொண்டை அடைப்பான்

இலங்கையின் வரண்ட பிரதேசத்திற்கு வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்று மழையைத் தருகிறது. இம்மழை ஆவணி மாதத்தில் ஆரம்பிக்கும்போது தொண்டை அடைப்பான் எனப்படும் நோய் மாடுகளுக்கும் எருமைகளுக்கும் தொற்றி இக்கால்நடைகளில் பெருமளவு இறப்பை ஏற்



படுத்துகின்றது. இலங்கையின் வரண்ட பிரதேசத்தில் பெருமளவு கால்நடைகள் காணப்பட்டபோதிலும் இக்கால்நடைகளின் பெருக்கத்திற்கும், விருத்திக்கும் தடையாக இந்நோய் காணப்படுகின்றது. கால் வாய் நோய் எனப்படும் இன்னுமொரு நோயும் மாடுகளுக்கும் எருமைகளுக்கும் ஏற்படுகின்றன. இந்நோயினால் கன்றுகள் இறப்பதுமல்லாமல் பெரிய மாடுகளில் உற்பத்தியும் குறைகிறது.

இவ்விரு நோய்களினால் வருடா வருடம் கால்நடைகளிடையே ஏற்படும் இழப்பு சென்ற வருட மதிப்பீட்டின்படி கிட்டத்தட்ட ஒன்பது மில்லியன் ரூபாவாகும். இந்நோய்களினால் ஏற்படும் இழப்பு தனிப்பட்ட பண்ணையாளர்களுக்கு நட்டத்தைக் கொண்டு வருவதுமல்லாமல் நாட்டின் விலங்குப்புரத உற்பத்திக்குப் பெரும் இடையூறாக இருப்பதோடு நாட்டின் பொருளாதாரத்தையும் பாதிக்கின்றது.

### தொண்டை அடைப்பான் நோய்

தொண்டை அடைப்பான் நோய் ஒருவகை பக்ரீரியாவினால் ஏற்படும் நோயாகும். இந்நோய் மாடுகளையும் எருமைகளையுமே அதிகமாகத் தாக்குகின்றது. பெரும்போக மழையின் ஆரம்பத்துடன் இந்நோயும் வரண்ட பிரதேசம் பூராவும் பரவலாகக் காணப்படும். இந்நோய் மிக விரைவில் மாடுகளிலும் எருமைகளிலும் இறப்பை ஏற்படுத்திவிடுகின்றது. பண்ணையில் திடீரென ஒரு மாடு இறந்தவுடன் தான் பண்ணையாளர் பதற்றமடைந்து மற்றைய மாடுகளை அவதானிக்க ஆரம்பிக்கின்றார். ஆனால் அந்நேரத்தில் பண்ணையிலுள்ள மற்றைய மாடுகளுக்கும் இந்நோய் ஆரம்பித்துவிட சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடும்.

இதைத் தொடர்ந்து கிராமத்தில் ஆங்காங்கு கால்நடை இறப்புக்கள் காணப்படுவதோடு நாளாக நாளாக மாடுகள் எருமைகள் ஆகியவை அதிகளவில் இறக்கவும் நேரிடுகின்றது. பொதுவாக நோய்ப்பட்ட மாடுகள் உணவுண்ணாது. காய்ச்சல் காணப்படும். வாயின் கீழ்த்தாடைப் பகுதியின் வெளிப்புறமாக வீக்கம் காணப்படும். இவ்வீக்கம் பின்னர் தொண்டைப் பகுதிக்குப் பரவுகின்றது. இதைத் தொடர்ந்து வீக்கம் கால்ப்பகுதிக்கு இறங்குவதால், கால்நடைகள் நொண்ட ஆரம்பிக்கின்றன. நோய் ஏற்பட்ட ஓரிரு நாட்களில் விலங்குகள் இறந்துவிடும்.

பொதுவாக ஆவணி மாதத்தை அடுத்த காலப்பகுதியில் எருமைகள் மாடுகள் பலவும் தொழுவத்திலும், குளம் குட்டைகளின் அருகேயும், பொதுவாக மேய்ச்சல் பகுதிகளிலும் இறந்து கிடப்பதை அவதானிக்கலாம். தொண்டை அடைப்பான்நோய், வரட்சியின் பின் கால்நடைகள் உணவுக் குறைபாட்டினால் பலம் குன்றியுள்ள போதும், இக்கால கட்டத்தில் கால்நடைகள் வேலைகளுக் குட்படுத்தப் படுவதனால் ஏற்படும் தாக்கத்தினாலும், அதிக வரட்சியின்பின் ஏற்படும் மழையினாலும், இக்கால நிலையின்போது நோய்க் காரணியான பக்ரீரியா பலம் பெறுவதாலும் இந்நோய் ஏற்படுவதாக ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்நோயைப் பண்ணையாளர் அவதானித்த சிலமணி நேரத்தினுள் கால்நடை இறந்து விடுவதால் அதற்குக் கொடுக்கப்படும் எந்தச் சிகிச்சையும் எந்தப் பலனையும் அளிக்கமாட்டாது. ஆனால் பண்ணையில் நோய் ஏற்படமுன் நோய்த்தடுப்புச் செய்து கொள்வதன்மூலம் கால்நடைகளைப் பாதுகாக்கலாம். ★

- சுமனதேவி தனபாலசிங்கம் -

# நிகழ்காலத்தைக் காட்டும் ஒல்லாந்தர் காலக்கதை

தமிழர் பிரதேசத்தை அடிமைப்படுத்தி ஆண்ட ஒல்லாந்த அரசின் ஒரு முக்கிய உத்தியோகத்தர் பூதத்தம்பி. அரசாங்கத்தின் நம்பிக்கைக்கு உரியவர். அவருக்கு ஓர் அழகியமனைவியும் ஒரு மகனும்.

ஒல்லாந்த அரசின் அடக்குமுறை ஆட்சிக்கு எதிராகப் போராடுகிறது வீரம்மிக்க தமிழ் இளைஞர் கூட்டம் ஒன்று. அக்கூட்டத்தின் தலைவன் பூலோகசிங்கன் எனும் வீரன்.

பூதத்தம்பி ஒல்லாந்த அரசுக்கு விசுவாசமாக நடப்பவர். அதே நேரத்தில் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானவரும் அல்ல. தமிழையும் மக்களையும் நேசிப்பவர். அவரது இயல்பு பூலோகசிங்கன் கூட்டத்தாருக்கும் தெரியும்.

ஒல்லாந்த அரசாங்கத்தின் முதலமைச்சன் ஒரு தமிழன். அவன் ஒரு கயவன், காமுகன், உத்தியோகத்திற்காகத் தன் இனத்தைக் காட்டிக் கொடுப்பவன், எதையும் செய்யக் கூடியவன், பூதத்தம்பியின் அழகிய மனைவிமேல் அவனுக்கு ஒரு கண். அவனுக்குக் கன்னிப்பருவத்தில் ஒரு மகள்.

ஒல்லாந்த அரசின் படைத்தலைவன் ஓர் ஒல்லாந்த இளைஞன். பூதத்தம்பியின் உயிர்ச் சிநேகிதன், முதலமைச்சனின் மகளின் காதலன்.

முதலமைச்சனின் சூழ்ச்சியால் பூதத்தம்பி மேல் இராசவிரோதக் குற்றம் சாட்டப்படுகிறது. தான் சுற்றவாளி என்று உண்மையை நிரூபிக்கமுடியாத இக்கட்டான நிலை பூதத்தம்பிக்கு, மரண தண்டனை விதிக்கப்படுகிறது. தண்டனையிலிருந்து தன் கணவனை மீட்க முதலமைச்சனிடம் மண்டியிடுகிறாள் பூதத்தம்பியின் மனைவி. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவளைத் தன் ஆசைக்கு இணங்க வைக்க முயன்றுதோல்வி அடைகிறான் முதலமைச்சன். அரசனிடம் மன்றாடுகிறாள், அரசனும் இரங்கவில்லை. தண்டனை நிறைவேற்றப் படுகிறது. பூதத்தம்பியோடு மனைவியும் உடனுயிர் துறக்கிறாள். பூதத்தம்பியின் நேர்மையை அறிந்திருந்தும் அவனைத் தண்டனையினின்றும் தப்பவைக்க முடியாது மனம்நொந்த நண்பன் - ஒல்லாந்தப் படைத் தளபதி - தற்கொலை செய்துகொள்கிறான். இதனைத்தொடர்ந்து விடுதலைப் போராட்டத்தில் பூதத்தம்பியின் மகனும் மற்றும் பலரும் சேர்கிறார்கள். போராட்டம் தொடர்கிறது.

இதுதான் படத்தின் பிரதான கதை. பூலோகசிங்கனதும் அவனது விடுதலை இயக்கத்தினரதும் போராட்டங்கள், ஒல்லாந்தப் பாதிரியார் ஒருவரது மதப்பற்று, தமிழ்ப்பற்று, திரு



நெல்வேலி ஞானப்பிரகாச முனிவரது ஆரம்பகால வாழ்க்கை, அவரது சைவத்தமிழ்ப்பற்று இவர்களுக்கிடையேயுள்ள நட்பு, கொள்கை வேறுபாடு-என்றுசிலமுக்கிய கிளைப்பகுதிகள்; இடையிடையே முதலமைச்சனின் மகளதும் ஒல்லாந்தப் படைத்தளபதியினதும் காதல், மற்றும் இனத்துரோகிகள் சிலரது குள்ளத்தனமான செயற்பாடுகள்.

—இவ்வாறு பல சம்பவங்களாலும் படத்தின் கதை நடத்திச் செல்லப் படுகிறது.

சரித்திர காலத்துக் கதை. ஆனால் இன்றைய காலத்தோடு நெருங்கிய ஒற்றுமை உடையது. படத்தில் வரும் வசனங்களில் சில இன்று நம் காதில் விழும் வசனங்களாகவே உள்ளன. உதாரணத்திற்கு ஒரு விடுதலை வீரனின் தாய் பேசும் வசனம் இதோ. எதைச் 'செய்தாலும் எங்கடை பெடியங்கள் சரியாய்த்தான் செய்வாங்கள்.'


பெரும்பாலான நடிகர்கள் மிகச் சிறப்பாகச் செய்தார்கள். பூதத்தம்பியாக நடித்தவர் மிக இயல்பாக நடித்தார். பூலோக சிங்கனுக்கு நடித்தவருக்குப் பாத்திரத்திற்குப் பொருத்தமான உடல்வாகும் முகப்பொலிவும் உணர்ச்சிகரமான நடிப்பும்; ஞானப்பிரகாசரும் பாதிரியாரும் அவ்வாறே. பாதிரியாக நடித்தவர் மாநகர சபை ஆணையாளர் சி. வி. கே. சிவஞானம்.

பூலோகசிங்கனின் மரணக் காட்சியில் கண்ணில் நீரை வரவழைக்கும் உருக்கமான நடிப்பு. நடிப்பைப் பொறுத்தவரை அதுவே சிறந்த கட்டம். கற்பனைகள் பாராட்டத்தக்கவை, பின்னணி, களம் என்பவை கதை நிகழ்ந்த காலத்திற்குப் பொருத்தமாக அமைந்தன. ★

- ரதி -

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 74



அனுப்புபவர் பெயர்:-
திரு/திருமதி/செல்வன்/செல்வி ..............................
..............................
விலாசம்:- ..............................
..............................
வயது:- ..............................
ஒப்பம்:- ..............................

**இடமிருந்து வலம்**

1. தலைமறைவு வாழ்க்கை 5. மன்மதன் காதலி 7. விடாய் 9. ஒரு வள்ளல் 10. செல்வம் 11. சர்ப்பம் 13 பருப்பு என்றவுடன் இந்த நகரின் பெயர் நினைவுக்கு வந்துவிடும் 15. கைவேலை 18. பிணம் 19. விரைவிலும் விரைவு 21. அயர்ச்சி தலைகீழாய்க் கிடக்கின்றது 22. பிரணவம் 23. மங்களம்.

**மேலிருந்து கீழ்**

1. ஒரு பிரபந்தம் 2. உலகம் 3. யானை 4. மறைவில் திட்டமிடப்படுவது 6. காட்சி 8. வெண்மைக்கு எதிரானது 11. உமாதேவி 12. நெருப்பில்லாமல் இது வராது 14. மறைமுகம் 16. முகவரி 17. இணங்க 20. நடையை வேகமாக்கும்படி உத்தரவிடுதல்- மாறிக்கிடக்கின்றது 21. கணவன் தலைகீழ்.

**சொற்சிலம்பம் போட்டி இல. 72 விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. உபவாசம் 6. பாரிசம் 7. காதணி 8. சிசு 9. மதலை 11. முதலை 12. பகை 13. புரதம் 15. கண் 16. வில் 17. சரி 20. வழி 21. திடர் 22. மனையாள்.

**மேலிருந்து கீழ்**

1. உபாசிப்பு 2. பரிசு 4. சம்மதம் 5. காணிக்கை 7. காலை 10. தலை 11. முதல்வர் 12. பண் 14. ரவி 15. கரிசனை 18. திரள் 19. நீதி,

**சொற்சிலம்பம் போட்டி இல. 72 பரிசு பெற்றவர்கள் விவரம்**

முதலாம் பரிசு: ரூபா 50/-
செல்வி தி. நீரஜா
மே/பா திரு. எஸ்.பொன்னம்பலம்
சாவகச்சேரி வடக்கு,
மீசாலை.

இரண்டாம் பரிசு: ரூபா 25/-
செல்வி சாந்தி கந்தையா
சண்டிலிப்பாய் ஒழுங்கை,
சங்கானை.

மூன்ரும் பரிசு: ரூபா 15/-
திருமதி இ. மோகனமுகுந்தன்
டச்சு வீதி, சங்குவேலி
மானிப்பாய்.

★ குறிப்பு:-
பரிசு பெற்றவர்களின் பணம் காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும். நேரில் எவரும் வர வேண்டியதில்லை.

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்களை, 'சொற்சிலம்பம்' போட்டி இல. 74, சஞ்சீவி, தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு தபால் உறையில் வைத்தோ, அல்லது அஞ்சல் அட்டையில் ஒட்டியோ, அடுத்து வரும் வெள்ளிக்கிழமை அல்லது முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

# பிரசாந்தி நிலைய முன்றிலில்...

(5ஆம் பக்க தொடர்ச்சி) மில்லாவிட்டாலும் இது பாபாவின் செய்கையாயிருக்கும் என்று எண்ணி அவர்களிடமிருந்து அந்தத் தொகையைப் பெற்றுள் இந்தியாவால்திருப்பினதும் பணத்தைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடுகளும் செய்தாள்.

வில்மாவிற்கு ஏகப்பட்ட சந்தோஷம். இந்திரா தேவியின் கோஷ்டியில் சேர்ந்து பிரசாந்தி நிலையம் வந்து சேர்ந்தாள்.

வில்மா எதிர்பார்த்த அந்த அற்புத நாளும் வந்தது. பாபாவின் தரிசனத்திற்காக நூற்றுக் கணக்கான பக்தர்களுடன் பிரசாந்தி நிலைய முன்றிலில் அமர்ந்திருந்தாள்.

பாபா வரும் நேரம். ஏதோ ஒரு தெய்வீக சூழலில் தான் இருப்பதாக உணர்ந்தாள். பாபா தன்பால் சொரியும் கருணையை நினைந்து நினைந்து மனம் உருகினாள். ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பால் விலாசமே தெரியாத முக்கிய மற்றிருந்த தன்னை தொலைபேசியில் தொடர்பு ஏற்படுத்தி: பின்பு பல சிரமங்களை எல்லாம் வெகு இலகுவாகக் களைந்து தன் விருப்பத்தைப் பூர்த்தி [illegible] பிரசாந்தி நிலையத்தின் முன் நிறுத்தி வைத்திருக்கும் சாயீசனை தரிசிக்க வில்மாவின் கண்கள் ஏங்கித் தவித்தன.

பாபாவும் அவள் முன் வந்து நின்றார். அவரின் தெய்வீக அழகைப் பார்த்துப் பார்த்துஉளங் குளிர களித்து ஆனந்தக் [illegible]ள். பாபா வில்மாவைப் புன் [illegible] பார்த்துக் கண்ணை இமைத்து 'மோதிரம் பிடித்துக் கொண்டதா?' என்றார். வில்மா சொல்ல முடியாத பரவச நிலையை எய்தினாள்.

'Sai Baba invitation to glory' By-Howard Murph என்னும் நூலிலிருந்து தழுவி எழுதியது.

# பாதை மாறிய...

(5ஆம் பக்க தொடர்ச்சி) சூழ்நிலைகளையும் காட்டுவதற்குக் கவிஞர் சுந்தரம்பிள்ளை இப்படைப்பின் மூலம் முயன்றுள்ளார். ஓரளவுக்கு வரலாற்று ரீதியான பின்னணியைக் கொண்டு வந்து நம் முன் நிறுத்தி விடுகிறார்.

சுந்தரம்பிள்ளையின் பாட்டுகளின் தன்மையை நோக்கும்போது, மூன்று விதமான கோலங்கள் உள்ளமையை நாம் உணருகிறோம். அவை—

(அ) சமகாலச் சம்பவங்களையும் அவற்றினடியாக எழும் உரையாடல்களையும் உணர்வுகளையும் உள்ளடக்கமாகக் கொள்ளும் பாட்டுக் கோலம்;

(ஆ) நவீன காவியங்கள் படைக்க முயன்ற பாரதியாரையும் — ஓரளவு பாரதிதாசனையும்- இரண்டோர் இடங்களில் ''மஹாகவி''யையும் நினைவூட்டும் பாட்டுக் கோலம்;

(இ) கம்பர், வில்லிபுத்தூரர் போன்ற பழம் புலவர்களின் எழுச்சியும், பழைய காவியங்களுக்கே உரிய மிடுக்கும் வீச்சும் கலந்த ஒரு வகையான பாட்டுக்கோலம்.

இது நீடித்த கலைப் பெறுமதியும், வரலாற்று நோக்கும், நீதிப்பார்வையும் கொண்ட ஒரு படைப்பாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட மருத்துவ சாட்சியம் காரணமாக சந்தேக நபர் நிரபராதி ஆனர்

சதாசிவத்திற்கு எதிரான வழக்கு நன்கு திட்டமிட்ட முறையில் சோடிக்கப்பட்டிருந்தது. வேலைக்காரன் வில்லியத்தின் வலுவான சாட்சியத்தை அடித்தளமாகக் கொண்டு அரச தரப்பினர் மிக நேர்த்தியாக வழக்கைப் பின்னிப் பிணைந்து வளர்த்திருந்தனர்.

சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சியங்களை மட்டும் வைத்து வில்லியத்தின் சாட்சியம் பொய் என்று நிரூபிப்பது எந்த வகையிலும் முடியாத காரியமாகவே இருந்திருக்கும். சதாசிவம் போன்று போதிய வசதியும், கொல்வின் ஆர்டி சில்வா போன்ற சாமர்த்தியமான வழக்கறிஞரும் இல்லாவிட்டால் இந்த வழக்கின் எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டிருப்பது நிச்சயம்.

சந்தர்ப்ப சூழ்நிலைக்கு அப்பாற்பட்ட சாட்சியத்தை–விஞ்ஞான பூர்வமான மருத்துவ அறிவைக் கொண்டு மட்டுமே இந்த வழக்கின் உண்மையை வெளிச்சத்துக்குக் கொண்டுவர முடியும் என்பதைச் சட்டத்தரணி கொல்வின் உணர்ந்தார்.

அவரது முயற்சியும், சதாசிவத்தின் வசதியான வாழ்க்கை நிலையும் லண்டனிலிருந்து ஒரு நிபுணத்துவ சாட்சியத்தை அழைக்க வழி செய்தது.

விஞ்ஞான ரீதியான நிபுணத்துவ சாட்சியத்தினால் மட்டுமே வில்லியத்தின் சாட்சியத்தைப் பொய் என உடைக்க முடிந்தது.

அதனால்தான் சதாசிவம் குற்றவாளிப் பட்டத்திலிருந்து தப்பினார்.

ஆகவே குற்றவியல் வழக்கில் சட்ட மருத்துவவியலின் பங்கின் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ள இது ஒரு 'சாம்பிள்'.

★ ★ ★

விசாரணை ஆரம்பமான போது எதிரிதரப்பின் நிபுணத்துவ சாட்சி

## சதாசிவம் கொலை வழக்கு

யாக சேர் சிட்னி ஸ்மித் ஆஜரானார்.

அவரின் கருத்துக்களை மறுக்கக் கூடியதாக அரசதரப்பில் பல சாட்சிகள் அழைக்கப்பட்டனர்.

உடல்கூறு சம்பந்தமான நிபுணர்கள் முதல் கணிதவியல் பேராசிரியர் வரை பல நிபுணர்கள் அழைக்கப்பட்டனர்.

திருமதி சதாசிவத்தின் வயிற்றில் காணப்பட்ட உணவு சமிபாடடைந்த நிலையை வைத்து கொலை நிகழ்ந்திருக்கக் கூடிய நேரத்தை டாக்டர் டி சேரமும், சேர் சிட்னி ஸ்மித்தும் பருமட்டாகக் கணித்திருந்தனர் அல்லவா?


அதனைத் தவறு என்று காட்டவே அரசதரப்பு இந்த முயற்சிகளை எடுத்தது. ஆனால் முயற்சி பலிக்கவில்லை.

வயிறு மற்றும் 22 அடி நீளமான குடலினூடாக உணவு செல்லும் நேரம் நிலைமையைப் பொறுத்துக் கணிசமான அளவு ஆளுக்கு ஆள் மாறுபடும். உடல், உள, சூழல் காரணங்களினாலும் இந்நேரம் மாறுபடும் என்றார் சேர் ஸ்மித்.

''உணவுக்குழாயை முற்றாக உணவு கடக்க எவ்வளவு நேரம் எடுக்கும்?'' என்று குறுக்கு விசாரணையின்போது அரச சட்டத்தரணி 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்பதுபோல் கேட்டார்.

''சராசரி ஒரு நேரத்தைக் குறிப்பிடுவது சுலபம். ஆனால் ஒரு குறிப்பிட்ட ஆளுக்கு இந்த சராசரி நேரம் பொருந்தும் என்று கூற முடியாது. ஒரு குதிரை ஒரு மைலை ஓடிக்கடப்பதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும் என்று கேட்பது போன்ற கேள்வி இது'' —என்றார் சேர் ஸ்மித்.

''குதிரையின் சந்ததி நிலை, சூழல் நிலை, ஓடும்



சதாசிவம் தம்பதியர்

இடம், குதிரையின் பயிற்சியாளர், குதிரையை ஓட்டுபவர்—இப்படி பல காரணிகளில் அல்லவா நேரம் தங்கியிருக்கின்றது! —இவ்வாறு சேர். ஸ்மித் கூறிய போது—

குதிரைப் பந்தயத்தில் அதிக நாட்டமுடைய நீதிபதி கிறேஸியன், அது மட்டுமல்ல; குதிரைச் சொந்தக்காரரிலும் அது தங்கி இருக்கிறது சேர் ஸ்மித்! என்று பலத்த சிரிப்புக்கு மத்தியில் குறுக்கிட்டுக் கூறினர்.

திருமதி சதாசிவத்தின் உடலில் ஏற்பட்ட காயங்கள் தொடர்பாகவும் சேர் ஸ்மித் கடுமையாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

''நீங்கள் இந்தக் காயங்களைக் கண்ணால் பார்க்கவில்லை. அப்படி இருக்கும்போது கொலைக்கு முன்னர்தான் இந்தக் காயங்கள் ஏற்பட்டன என டாக்டர். டி சேரம் கூறுவதை மட்டும் நீங்கள் எப்படி நம்புவீர்கள்?'' — இப்படி கேள்வி எழுப்பினர் அரச சட்டத்தரணி.

''இந்த விடயம் தொடர்பாக டாக்டர். டி சேரத்தின் அறிக்கையை நான் முற்றாக ஏற்றுக்கொள்கிறேன்'' —என்று சேர். ஸ்மித் பதிலளித்தார்.

அவ்வேளை அரச சட்டத்தரணி குறுக்கிட்டார்.

லண்டனில் நடந்த பொக்ஸ் வழக்கை அவர் நினைவுபடுத்தினர்.

## சட்டத்துறையில் மருத்துவ இயல்

''இலங்கையில் கடமை ஆற்றும் சட்டவைத்திய அதிகாரி டாக்டர். டி சேரத்திலும் பார்க்க—புகழ்பெற்ற, பிரபல்யம் வாய்ந்த சட்ட மருத்துவவியல் அறிஞரான சேர். பேர்னட் ஸ்பில்ஸ்பேறியின் சாட்சியத்தை அந்த வழக்கில் ஏற்றுக்கொள்ள மறுத்த நீங்கள் இந்த வழக்கில் மட்டும் டி சேரத்தின் சாட்சியத்தை ஏற்றுக்கொள்வது எப்படி நியாயம்?— இப்படி அரச சட்டத்தரணி குறுக்குக் கேள்வி எழுப்பினர்.

டாக்டர் ஸ்மித் சளைக்காமல் பதிலளித்தார்.

இங்கு நிலைமை வேறு. அங்கு மாதிரியுருவை நானும் பரிசோதித்திருந்தேன். ஆகவே உறுதியாக எனது கருத்தை—அது யாருடன் முரண்பட்டிருந்தாலும் — என்னால் கூறமுடிந்தது.

ஆனால் இங்கு திருமதி சதாசிவத்தின் சடலத்தையும் அதில் உள்ள காயங்களையும் டாக்டர் டி சேரத்தைத் தவிர நானோ அல்லது வேறு யாருமோ பார்க்கவில்லை. பரிசோதிக்கவில்லை.

ஆகவே அவரை ஒரு நேர்மையான சாட்சியாகக் கருதி அவரின் அறிக்கையின் அடிப்படையில் நான் சாட்சியமளிக்கின்றேன் — இப்படி சேர் ஸ்மித் பதிலளித்தார்.

சமையலறையில் காணப்பட்ட கறுப்பு நிறத்தூள் திருமதி சதாசிவத்தின் காலிலும் காணப்பட்டது. முக்கியமான விடயமாக இருந்ததால் அது குறித்தும் குறுக்கு விசாரணையில் கேள்வி எழுப்பப்பட்டது.

''நீதிமன்றத்தையும் ஏனைய விசாரணைகளையும் குழப்புவதற்காக கொலைக்குப் பின்னர் எதிரியே சமையலறையில் காணப்பட்ட இந்தக் கறுப்பு நிறத்தூளை சடலத்தின் காலில் பூசியிருக்க முடியுமா? '' — இப்படி அரச சட்டத்தரணி கேட்டார்.

''அப்படியும் நடந்திருக்கலாம்'' — என சிரித்துக் கொண்டு சேர் ஸ்மித் பதிலளித்தார்.

ஆனால் அப்படி நடக்க நிகழ்தகவு குறைவு என்பதை நீதிபதி தமது தொகுப்புரையில் பின்னர் சுட்டிக்காட்டினர்.

வழக்கு விசாரணை ஆரம்பமான போது கொழும்பில் பரவலான கருத்து திரு. சதாசிவத்திற்கு எதிராகவே இருந்தது.

சேர் சிட்னி ஸ்மித் எதிரிக்காகச் சாட்சியமளிக்க இலங்கை வந்த போது ''நீதியில் தலையிட வேண்டாம்'' என்று தெரிவித்து பல மிரட்டல்கள். — கடிதங்களாகவும், தொலைபேசி அழைப்புகளாகவும் அவருக்கு வந்தன.

இயற்கை நீதியையும் சட்டத்தையும் குழப்பிவிட்டு சேர் ஸ்மித் தப்பிச் செல்கின்றார். அவர் தப்பிச் செல்ல இயற்கை கூட இடம் கொடுக்கக் கூடாது. அவர் பயணம் செய்யும் விமானம் கீழே விழுந்து நொருங்கி அவர் உயிரிழக்க இயற்கை உதவிசெய்யவேண்டும்''- இப்படி ஓர் எழுத்தாளர் எழுதினர் என்றால் பாருங்களேன்.

இந்தத் தொடரில் ஒரு வழக்கின் எதிரியை சட்ட மருத்துவவியல் எவ்வாறு காப்பாற்றியது என்பதைப் பார்த்தோம்.

ஒரு குற்றவாளியை சட்ட மருத்துவவியல் எவ்வாறு பிடித்துக் கொடுத்தது என்பதை அடுத்த கட்டுரையில் பார்ப்போம். ★

தமிழில் தருபவர்: வித்தி

---

# இங்கிலாந்தில் பாகிஸ்தான் அணி பெற்ற முதல் வெற்றி

இங்கிலாந்துக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான ஐந்தாவதும் இறுதியானதுமான டெஸ்ட் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை ஓவல் மைதானத்தில் முடிவு பெற்றது.

இந்தப் போட்டியை வெற்றி தோல்வியின்றி முடித்ததன் மூலம் இந்த ஐந்து டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் வெற்றி பெற்றுள்ளது. இங்கிலாந்து மண்ணில் பாகிஸ்தான் பெற்ற முதல் வெற்றி இதுவாகும்.

இங்கிலாந்து தனது சொந்த மண்ணில் மூன்றாவது டெஸ்ட் தொடரை அந்நிய நாடொன்றிடம் இழந்துள்ளது. ஏற்கனவே இந்தியா, நியூசிலாந்து ஆகியவற்றிடம் தோல்வியுற்றுப் பின் அவுஸ்திரேலியாவில் தொடரை வென்று ஓரளவு தலை நிமிர்ந்த இங்கிலாந்தை பாகிஸ்தான் மீண்டும் மண் கவ்வச் செய்துள்ளது.

மூன்றாவது டெஸ்டை பாகிஸ்தான் வென்றவுடன் மிகுதி இரண்டு டெஸ்ட் போட்டிகளையும் பாதுகாப்பாகவே ஆடும் என்று நினைத்தவர்களுக்கு இறுதி டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் ஆடிய பாணி வியப்பை அளித்தது. ஆட்டம் தொடங்கியது முதல் போட்டியைத் தன்பக்கமே வைத்திருந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி தனது முதலாவது இனிங்சில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 708 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர்.

இதுவே பாகிஸ்தான் அணி டெஸ்ட் போட்டிகளில் பெற்ற ஆகக்கூடிய ஓட்டங்களாகும். இதற்கு முன் பாகிஸ்தான் பெற்ற அதிகூடிய ஓட்டங்கள் இந்தியாவுக்கு எதிராகப் பெறப்பட்ட 6 விக்கெட் இழப்புக்கு 674 ஓட்டங்கள்.

அத்தோடு ஓவல் கிரிக்கெட் மைதானத்தில் ஒரு டெஸ்ட் ஆடும் கோஷ்டியால் பெறப்பட்ட ஓட்ட எண்ணிக்கையில் இது இரண்டாவது இடத்தை வகிக்கின்றது டெஸ்ட் ஓட்ட எண்ணிக்கையில் ஆறாவது இடத்தைப் பெறுகிறது.

இதற்கு முன் ஓவலில் பெறப்பட்ட அதிகப்படியான ஓட்டங்கள் 1938 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையேயான டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்தினால் பெறப்பட்ட 7 விக்கெட் இழப்புக்கு 903 ஓட்டங்கள். இதுவே இதுவரை டெஸ்ட் ஆட்டங்களில் பெறப்பட்ட அதிகூடிய ஓட்டங்களுமாகும்.

பாகிஸ்தான் இந்த சாதனை ஓட்டங்களைப் பெற வழிவகுத்தவர் ஜாவிட் மாயண்டாட். இவர் தன்னுடைய பங்குக்கு 260 ஓட்டங்களை விளாசித்தள்ளினர். இது இவர் தன்னுடைய 86 டெஸ்டில் பெற்ற 15 ஆவது சதமாகும் இந்த இரட்டை சதத்துடன் மியண்டாட் 6000 ஓட்டங்களைப் பெற்றவர் வரிசையில் தன்னை இணைத்துக் கொள்ளும் முதலாவது பாகிஸ்தானியர் ஆகும்.

இதே ஜாவிட் மியண்டாட் 1975 ஆம் ஆண்டு பாகிஸ்தான் பாடசாலைகள் தெரிவு கோஷ்டியின் தலைவராக இலங்கை வந்து யாழ் மாவட்ட பாடசாலைகள் கோஷ்டிக்கு எதிரான ஆட்டத்தில் மத்திய கல்லூரி மைதானத்தில் தனது கணக்குக்கு ஒரு சதத்தை வரவு வைத்தவர் என்பது யாழ் விளையாட்டு ரசிகர்கள் அறிந்ததே.

ஐந்தாவது டெஸ்டில் பாகிஸ்தான் அணிக்கு வலுவூட்டக் கூடிய இரண்டு சதங்களைப் பெற்ற மற்ற இருவர் அணித்தலைவர் இம்பிரான் கானும், இளம் ஆட்டக்காரர் சலீம் மாலிக்கும்.

இம்பிரான் தன்னுடைய கடைசி டெஸ்டிலும் ஒரு சதத்தைப் பெற்றது அவர் திறமைக்குச் சான்று. சலீம்மாலிக் மூன்றாவது டெஸ்டில் ஒரு ஓட்டத்தால் துரதிஷ்டவசமாகத் தவறவிட்ட சதத்தை இந்த ஆட்டத்தில் பூர்த்தி

## விளையாட்டு விமர்சனம்

செய்துள்ளார்.

இங்கிலாந்து பந்து வீச்சாளர்களில் கிரகாம் டில் 154 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். சாதனை வீரர் இயன் பொத்தம் தன்னுடைய கடைசி டெஸ்டிலும் ஒரு சாதனையைச் செய்துள்ளார். இவர் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்ற 217 ஓட்டங்களைக் கொடுத்ததன் மூலம் இவரே அதிகப்படியான ஓட்டங்களைக் கொடுத்த இங்கிலாந்து பந்து வீச்சாளராகிறார்.

பாகிஸ்தானின் பந்து வீச்சாளர்களை எதிர்கொண்டு இங்கிலாந்து முதல் இனிங்சில் பெற்ற ஓட்டங்கள் 253 மட்டுமே. இங்கிலாந்தின் வீழ்ச்சிக்கு வழி வகுத்த சுழல் பந்து வீச்சாளர் அப்துல் கதிர் 95 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். இவரின் இந்த அருமையான பந்து வீச்சு உலகக் கிண்ணப் போட்டியில் பிரகாசிக்க இது அறிகுறியாகிறது.

இனிங்ஸ் தோல்வியிலிருந்து தப்புவதற்காக மீண்டும் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து கோஷ்டி வீரர்களின் அணி நடையை ஓரளவு கட்டுப்படுத்துவதில் வெற்றி கண்டவர்கள் இயன் பொத்தமும், அணித்தலைவர் மைக் கெட்டிங்கும். மைக்கெட்டிங் தனது தலைமைத்துவ ஆட்டத்தால் ஆட்டமிழக்காமல் 150 ஓட்டங்களைப் பெற்றார். இங்கிலாந்துக்குப்பல போட்டிகளால் வெற்றிகளை ஈட்டிக்கொடுத்த மொத்தம் தனது வழமையான பாணி ஆட்டத்தில் இருந்து மாறுபட்டு நான்கு மணித்தியாலங்கள் துடுப்பெடுத்தாடி 51 ஓட்டங்களைப் பெற்று இங்கிலாந்து தோல்வி



மியாண்டாட்

யில் இருந்து தப்ப வழி அமைத்துக் கொடுத்தார். இங்கிலாந்துக்கு ஆட்ட நேர இறுதியில் மழையும் துணை செய்ய 4 விக்கெட்டு இழப்புக்கு 315 ஓட்டங்களைப் பெற்றதுடன் ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது.

இந்த ஆட்டத்தின் நாயகருக்கான பரிசு ஜாவிட் மியாண்டாட்டுக்கும் தொடரின் நாயகருக்கான பரிசு பாகிஸ்தான் அணித்தலைவர் இம்ரான்கானுக்கும் இங்கிலாந்து அணித்தலைவர் மைக் கெட்டிங்கிற்கும் வழங்கப்பட்டது. ★

- ஈசன் -

---

## இந்தியா - பாகிஸ்தான் சுதந்திரதினம்:

# 40 ஆண்டுகால வடு இன்றும் மாறாதது ஏன்?

சர்வதேச அரங்கில் எதிரும் புதிருமாக இருந்துவரும் இந்தியாவும் பாகிஸ்தானும் தமது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்றன.

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 ஆம் திகதி கராச்சியில் பிரிட்டிஷ், யூனியன் ஜக்கொடி இறக்கப்பட்டு பாகிஸ்தானுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது.

ஒருநாள் கழித்து ஆகஸ்ட் 15 ஆம் திகதி புதுடில்லியில் யூனியன் ஜக்கொடி இறக்கப்பட்டது.

முஸ்லிம்களின் தனி நாட்டுக் கோரிக்கையை அடுத்து இந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவருக்கு எதிராக மற்றவர் எழுந்து நூற்றுக்கணக்கானோர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து பாகிஸ்தான் தனி நாடாகப் பிரிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நடந்து இன்று 40 ஆண்டுகள் கழிந்துவிட்டன. சுதந்திரத்தின் போது ஏற்பட்ட வடுக்கள் இன்னும் ஆறவில்லை.

கூட்டுமொத்தமாக 90 கோடி மக்களைக் கொண்ட இந்தியாவும் பாகிஸ்தானும் இன்னும் ஒன்றை ஒன்று சந்தேகக் கண் கொண்டு நோக்கி வருகின்றன.

இன்று பாகிஸ்தான் அணுகுண்டு உற்பத்தி செய்யும் அளவுக்குப் போட்டி உச்சக்கட்டத்தில் இருந்து வருகிறது.

இந்தியாவும் அணு ஆயுத உற்பத்தியில் முழு அளவில் ஈடுபடும் சாத்தியங்கள் இருந்து வருகின்றன.

இரு நாடுகளுக்கும் இடையிலான போட்டி வலுக்குமானால் ஐரோப்பாவில் இருந்துவரும் அணு ஆயுத யுத்தப் பீதி உபகண்டத்துக்கும் வியாபிக்கும் சூழ்நிலை உருவாகிவிடும்.

### வல்லரசுப் போட்டி

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் சுதந்திரம் பெற்ற நாள் முதல் இருந்துவரும் நெருக்கடி நிலைக்கு இந்த அமெரிக்கா - சோவியத்



ஸியா-உல்-ஹக்

வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டியே முக்கிய காரணம் என்பது வெளிப்படையானது.

இந்தியாவில் ஜவஹர்லால் நேருவின் காலம் முதல் — பாகிஸ்தானில் ஜின்னாவின் காலம் முதல் — இரு நாடுகளுமே வெவ்வேறு வல்

உலக உலா
என்.பி.சீலன்

லரசு முகாமுக்குள் இருந்து வருகின்றன.

இந்தியா சோவியத் யூனியன் சார்பான நாடாகவும் பாகிஸ்தான் அமெரிக்கா சார்பான நாடாகவும் இருந்து வருகின்றன.

1979 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானுக்குள் சோவியத் படைகள்

பிரவேசித்ததைச் சாட்டாக வைத்து பாகிஸ்தானுக்கான ஆயுத உதவிகளை அமெரிக்கா பலமடங்காக அதிகரித்தது.

கடந்த சில வருடங்களாக இரு நாடுகளுக்கும் இடையில் பதற்ற நிலை அதிகரிப்பதற்கு பாகிஸ்தானுக்கான அமெரிக்க ஆயுதக் குவிப்பே காரணமாக இருந்து வருகின்றது.

அணுகுண்டு உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள் கடத்தல் முயற்சி ஒன்று அம்பலத்துக்கு வந்ததை அடுத்து பாகிஸ்தானுக்கான உதவிகளை அமெரிக்கா தற்போது தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறது.

### காஷ்மீர்

இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினை முதலில் காஷ்மீரிலேயே ஆரம்பித்தது.

முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட காஷ்மீர் தொடர்பாக 1947 ஆம் ஆண்டும் 1965 ஆம் ஆண்டும் யுத்தங்கள் மூண்டன.

யுத்தத்தின் விளைவாக காஷ்மீர் இன்று ஜம்மு கஷ்மீர் — அஸாத் காஷ்மீர் என்று துண்டாடப்பட்டிருக்கிறது.

ஜம்மு காஷ்மீர் இந்தியக் கட்டுப்பாட்டிலும் அஸாத் காஷ்மீர் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலும் இருந்து வருகின்றன.

காஷ்மீர் மக்கள் எந்த நாட்டுடன் சேர வேண்டும் என்பது தொடர்பாக சர்வஜன வாக்

என்ற ஜவஹர்லால் நேருவின் உறுதிமொழி இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

அது தற்பொழுது



ராஜீவ்காந்தி

காலம் கடந்ததாகிவிட்டது,

### பங்களாதேஷ்

1971 ஆம் ஆண்டு கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்ட யுத்தம் பங்களாதேஷ் நாடு பிரகடனம் ஆகியவை இந்த இரு நாடுகளையும் இனி இல்லை என்ற அளவுக்கு பகைமையின் விளிம்புக்குக் கொண்டுவந்து விட்டன.

யுத்தத்தின் பின்பு இந்திராவுக்கும் பூட்டோவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட சிம்லா ஒப்பந்தம் யுத்தத்தால் ஏற்பட்ட விளைவுகளைத் தீர்க்க உதவியதே அன்றி இரு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கடியைத் தணிக்க உதவவில்லை.

தற்போது ராஜீவ் — ஸியா-உல்-ஹக் மோதல் தொடர்கிறது.

தற்போதைய நிலையில் பாகிஸ்தான் — இந்தியா தலைமைப்பீடங்களில் ஏற்படக் கூடிய மாற்றங்களே நெருக்கடியை ஓரளவு தணிக்கக்கூடியவை.

---

### உலகையே --

(3ஆம்பக்க தொடர்ச்சி)

டோ, நேட்டோ, வார்சோ ஒப்பந்த நாடுகளின் அமைப்பு போன்ற குழுக்களுடன் சேராது, சோவியத் யூனியனுடன் சமாதான ஒப்பந்தம் செய்து, அதேநேரத்தில் அமெரிக்காவுடனும் மற்ற மேற்கு வல்லரசு நாடுகளுடனும் சுமுக[illegible] முடியுமென்றால், அதற்கு [illegible] அத்திவாரமிட்ட வெளிவிவகாரக்கொள்கையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேககசுகத்திற்கு
வெயில் அதிகம், வியர்வை அதிகம், உடம்பு நன்றாக இருக்கவேண்டும் காலையில் நீராடுதல் அவசியம் ஔடத குணம் நிறைந்த வேப்பெண்ணெய் கலந்து தயாரித்த ''நீம் சோப்'' தேய்த்து நீராடிப் பாருங்கள்.
★ இது ஒரு மில்க்வைற் தயாரிப்பு ★
பாவித்த நீம்சோப் மேலுறைகள் 5 அனுப்பி ஒரு அழகிய காந்தி ஸ்ரிக்கர் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

15 - 08 - 1987 சனிக்கிழமை

★ காலம் பெறுமதியானது ★
மாணுக்கியர் தம் சீருடைகள் பால்போல பளிச்சென்று விளங்க எங்கள் நீலம் கலந்த
'' மில்க்வைற் சலவைப் பவுடர் ''
உதவிசெய்யும்
★ உபயோகித்துப் பயனடையுங்கள் ★
20 மேலுறைகளை அனுப்பி அழகிய கைலேஞ்சி ஒன்றைப் பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

# செயல் அதிகாரம் யாருக்கு அதிகம், ஜனாதிபதிக்கா, நாடாளுமன்றத்திற்கா?

## இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் உரைத்துப் பார்க்கத் தயாராயிருக்கிறார் பிரேமா

உள்ளும் புறமும்
குறுமுனி

இன்றுடன் பதி வெட்டுத் தினங்கள் முடிவடைகின்றன, ஒப்பந்தம் கைச்சாத்தாகி.

இம்மாசம் பதினெட்டாம்திகதி நாடாளுமன்றத்தில் ஒப்பந்தம் தாக்கல் செய்யப்படும் என்று முன்னர் கூறப்பட்டது பெரும்பாலும் பழங்கதையாகி விட்டது.

ஒப்பந்தம் அல்ல, ஒப்பந்தத்தில் உள்ள சில யோசனைகள் அடங்கிய சட்டமூலம் தான் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று இப்போது கூறப்படுகின்றது.

அதுவும் செப்டம்பர் கடைசி அல்லது அக்டோபர் முதல வாரத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தர்மிஷ்டர் கூறிவிட்டார்.

'என்று தணியும் இந்த (தென் இலங்கை) ஆவேசத்தின் வேகம்' என்று காத்து இருப்பது போல் தெரிகின்றது.

### முல்லேரியா பேச்சின் முக்கியத்துவம்

இந்த நிலையில் முல்லேரியாப் பேச்சு கொழும்பு அரசியல் வட்டாரங்களில் முக்கியத்துவம் பெற்றுள்ளதாம்.

ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் பிரதமர் பிரேமதாஸ பொது நிகழ்ச்சி ஒன்றில் நிகழ்த்திய முதலாவது பேச்சு அது.

ஒப்பந்தத்துக்கும்தனக்கும் உள்ள 'பந்தபாசம்' பற்றி பிரதமர் விளக்கிச் சொல்வர் எனப் பலர் எதிர்பார்த்தனர். பட்டும் படாமலும், முட்டி மோதாமலும் பிரதமர் பேசி இருக்கின்றார்.

ஆனால் அரசமைப்புச் சட்டத்தை முதன்மை ஸ்தானத்துக்கு உயர்த்தி வைத்துப் பேசியிருக்கின்றார்.

ஜனாதிபதி முறைபற்றி தர்மிஷ்டர் முதலிடம் கொடுத்துப் பேசியதற்குப் பதிலாக பிரதமர் பேச்சு அமைந்துள்ளதாக கொழும்பு அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

ஒப்பந்தம் கைச்சாத்தான கையோடு கூட்டுப் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை இலங்கை ஜனாதிபதியும் இந்தியப் பிரதமரும் நடத்தினார்கள்.

அப்போது ஒரு செய்தியாளர் பின்வருமாறு கேட்டார்:-

''நாடாளுமன்றம்' ஒப்பந்த யோசனைகளை ஏற்றுக்கொள்ள மறுத்தால் என்ன செய்வீர்கள்?''

''நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடுவேன். இலங்கை ஜனாதிபதி முறை உலகிலேயே தனித்துவமானது''— இப்படி தர்மிஷ்டர் பதிலளித்தார்.

முல்லேரியாக் கூட்டத்திலே பிரதமர் என்ன சொல்லி இருக்கின்றார்?

''இந்த அரசமைப்பின் கீழ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை நாட்டில் நிலவுகின்றது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு என்ன அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன?

''நிறைவேற்று அதிகாரங்கள் மட்டுமே''

''தற்போதைய சட்டத்தின் கீழ்தான் ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரங்களை உபயோகிக்கலாம். தேவையான சட்டத்தை தயாரிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது.

''புதிய சட்டம் ஜனாதிபதிக்குத் தேவையானால் அவர் நாடாளுமன்றத்தைக் கொண்டுதான் அச்சட்டத்தை இயற்ற முடியும். பாருங்கள், எவ்வளவு பலமான அரசமைப்புச் சட்டத்தை நாம் வைத்து இருக்கின்றோம் என்பதை.''

—இப்படி பிரதமர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

''ஒப்பந்த யோசனைகளை ஏற்றுக் கொள்ள மறுத்தால் நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுவேன்''— என்ற தர்மிஷ்டரின் கூற்றுக்கு இது பதிலாக அமைந்துள்ளது—

### ஒப்பந்தமும் பிரசைகளும்

பேச்சின் இன்னொரு கட்டத்தில் பிரதமர் சொல்கின்றார்.

''நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி எந்த ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடலாம். அதைச் சட்டமாக்கும் போது அதில் உள்ளவற்றைப் பரிசிலனை செய்வதற்கு ஒவ்வொரு பிரசைக்கும் உரிமை உண்டு அந்த உரிமையை எமது அரசமைப்பு வழங்கியுள்ளது. எவ்வளவு தனித்துவமான அரசமைப்பு என்று பார்த்தீர்களா?

இப்படி பிரதமர் கூறியிருக்கின்றார் அதுமட்டுமல்ல,—

''ஒரு சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவேண்டும். பின்னர் உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்படவேண்டும் அங்கு அதனை எதிர்த்துவாதாட பிரசைகளுக்கு உரிமையுண்டு. எனவே சட்டமூலம்பற்றி குழப்பமோ, பதற்றமோ அடைய வேண்டியதில்லை''

''நாடாளுமன்றத்தில் பேசும் முன்னர் அமைச்சரவையிலும் நாடாளுமன்றக் குழுவிலும் இது பற்றி விவாதிக்க வேண்டும். நான் எனது கருத்தைக் கவனமாகப் பரிசிலனை செய்த பின்னரே வெளியிடுவேன்''— என்றும் தெரிவித்திருக்கிறார்– பிரதமர்.

### நீதிமன்றத்தில் போராடுவதற்கு தயாராகிறார்

பிரதமரின் முல்லேரியாப் பேச்சு புதிய யோசனைகள் அடங்கிய சட்டமூலத்தை நாடாளுமன்றம் ஏற்றுக் கொள்ள மறுத்தால் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது என்பதை வலியுறுத்துவதாகவும்,

புதிய யோசனைகள் நாட்டின் இறைமைக்குத் தீங்கு விளைவிப்பதாக இருப்பின் அதனை எதிர்ப்பதற்குச் சட்டபூர்வமான வழிகள் இருக்கின்றன; ஏன் வன்செயல்களில் ஈடுபட வேண்டும் என்று ஆலோசனை கூறுவதாகவும்—

அமைந்து உள்ளது

ஒன்று நிச்சயமாகிவிட்டது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் கூறப்பட்ட யோசனைகள் அடங்கிய சட்டமூலத்தை சட்டரீதியாக எதிர்த்து வாதாடும் போராட்டம் ஒன்றுக்கு பிரதமரும் அவரின் சகாக்களும் தயாராகி விட்டனர் என்பது தான் அது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரம் என்ன? நாடாளு மன்றத்துக்கு உள்ள அதிகாரம் என்ன? அதிகசெயல் அதிகாரம் யாருக்கு?

இவற்றை வரையறுக்கும் அரசியல் சட்டப்பிரச்சினையாகவும் இது மாறக்கூடும் அல்லவா?

எப்படியாயினும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் தலைமையிலான நாடாளுமன்ற முறை முதன்முறையாக இந்திய–இலங்கை ஒப்பந்தம் என்ற 'உரைக்கல்'லில் பரீட்சித்துப் பார்க்கப்படப் போகின்றது.

இப்பரீட்சையில் யார் பதவி பறிபோகுமோ? பொறுத்து இருந்துதான் பார்க்கவேண்டும்

# முருகன்திருவிளையாடல்

'முருகன் கோயில்மணி ஓசை'யைக் கேட்க விரும்புகின்றார் ஒருவர்

அவர் வேறுயாரும் அல்லர். தேசிய பாதுகாப்பு அமைச்சுப் பதவியில் இருந்து 'புனர் வாழ்வு' பெறப்போகும் திரு. அத்துலத்முதலி.

அவர் நடத்திய ஷெல், பொம்மா தாக்குதல் ஓசையில் அகப்பட்டு விழுந்து நொருங்கியது தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய மணிக்கூண்டுக் கோபுரம்.

அந்த ஆலயத்தில் இருந்து மீண்டும் மணி ஓசையைக் கேட்க விரும்பும் அமைச்சரின் ஓசையையும் உருவத்தையும் ஒலிபரப்பு, ஒளிபரப்புக்களில் நாம் காண முடியாதுள்ளது.

இந்திய—இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட நாளில் இருந்து 'அமைதி' யாகி விட்டார்.

அமைதிப்படை இவ்வளவு சீக்கிரம் வந்து விட்டதே என்ற கவலை ஒரு புறம்.

அது வரப்போவதைத் தர்மிஷ்டர் முன்கூரே தன்னிடம் கூறவில்லை என்ற கவலை மறு புறம்

இந்த நிலையில் முப்பது லட்சம் ரூபா செலவில் செல்வச்சந்நிதி ஆலயத்தை புனரமைப்புச் செய்யப் போகின்றாராம் அமைச்சர்.

'முருகன் கோயில்மணி ஓசை' மீண்டும் கேட்டால் தான் தனது 'ஓசை' உரியவரின் செவிகளில் ஏறும் என்று எண்ணிவிட்டாரோ எண்ணமேவோ, எல்லாம் முருகனின் திருவிளையாடலே.

# கண்ணீரும் தண்ணீரும்

பண்டா–செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து 1957 இல் கண்டி சந்தையில் பெரிய கூட்டம் ஒன்று நடைபெற்றது.

திரு டட்லி சேனநாயக்கா, திரு பிரேமதாஸ ஆகியோர் பேசினர்.

திரு. பிரேமதாஸ சொன்னார்: ''இக்கூட்டத்தில் கலந்துகொண்ட சனத்திரளை திரு. பண்டாரநாயக்கா பார்த்திருந்தாரானால் அவரது கண்களில் இருந்து நீர் வழிந்தோடியிருக்கும்''

சில தினங்கள் கழித்து அதே இடத்தில் பிரதமர் திரு. பண்டாரநாயக்கா பண்டா–செல்வா ஒப்பந்தத்தை ஆதரித்து கூட்டம் ஒன்றை நடத்தினர்.

அக் கூட்டத்தில் திரு. பண்டாரநாயக்க பேசினர்.

அவர் சொன்னார்: ''பிரேமதாஸாவும் டட்லி துரையும் இக்கூட்டத்தைப் பார்த்திருக்க வேண்டாம். டட்லி பார்த்திருப்பாரானால் நீர் எங்கிருந்தோ வந்திருக்கும்''—

ஆதாரம் 'தமிழ் டைம்ஸ்–'

## அமைச்சரவைக் கூட்டத்தில் தளபதிகள்

கொழும்பு, ஆக. 15

கடந்த புதன்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முப்படைத் தளபதிகளும் கலந்து கொண்டனர்.

## ஜெய்ப்பூர்க்கால் தொழிற்சாலை திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஆக 15

யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர்க்கால் தொழிற்சாலைத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3–30 மணியளவில் நடைபெறும்.

கொழும்பு ஜெய்ப்பூர்க்கால் தொழிற்சாலைத் திட்ட முகாமையாளரும் கொழும்பு ஆபத்துக்கு உதவும் நட்புறவுச் சங்கச் செயலாளருமான திருமதி சுவர்ணு பெர்டினன்ட் தொழிற்சாலையைத் திறந்து வைப்பார்

சுண்டுக்குளி பழைய பூங்கா வீதியில் உள்ள 5ஆம் இலக்கக் கட்டடத்தில் இத்தொழிற்சாலை அமைந்துள்ளது.

## பங்குத்தந்தை மாற்றம்

குருநகர், ஆக. 15

குருநகர் புனிதர் யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வண– பிதா பீற்றர் துரைரெத்தினம் இன்று சனி முதல் மயிலிட்டி– ஊறணி பங்குக்கு மாற்றம் அடைந்து செல்கிறார்.

இவருடைய இடத்திற்கு நாவாந்துறை— நவாலி பங்குத் தந்தை வண– பிதா பீ. எம். இம்மானுவல் மாற்றம் பெற்று வருகிறார்.

(உ-51)

## சிலீப்பர்கட்டை தேவை

கொழும்பு, ஆக 15

வடபகுதி ரயில்சேவையை மீண்டும் வழமைக்குக் கொண்டுவர இன்னும் சுமார் ஏழாயிரம் சிலீப்பர் கட்டைகள் தேவைப்படுகின்றன.

தற்போது 3 ஆயிரம் சிலீப்பர் கட்டைகளே கைவசம் உள்ளன.

—இப்படி ரயில்வே மேலதிகப் பொதுமுகாமையாளர் டி சி. வெல்வல தெரிவித்தார்.

## ஆவி அரசு திடீர் முடிவு

மெல்போர்ன், ஆக. 15

பிஜியின் இடைக்கால அரசை அங்கீகரிப்பது என்று ஆஸ்திரேலிய அரசு தீர்மானித்துள்ளது.

இராணுவப் புரட்சி மூலம் டாக்டர் பவித்திரா அரசாங்கம் பதவி கவிழ்க்கப்பட்ட பின்னர் பிஜியின் புதிய ஆட்சியை அங்கீகரிக்கப் போவதில்லை என்று ஆஸ்திரேலியா முன்பு அறிவித்திருந்தது தெரிந்ததே.

(உ–எ)

## இந்தியாவின் சுதந்திரதினம்

புதுடில்லி, ஆக.15

இந்தியாவின் 41 வது சுதந்திர தினம் இன்று (சனி) ஆகும்.

பிரதமர் ராஜீவ்காந்தி இன்று காலை செங்கோட்டை அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்ளுவார்.

பின்னர் அங்கு உரை நிகழ்த்துவார் (உ–எ)

# பதவி வெற்றிடம்

## புதுக்குடியிருப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

பொதுமுகாமையாளர் குறியீட்டு இலக்கம் 115/8
வயது 23 தொடக்கம் 50 வரை

வேதனம் 500—840 / 20x5—30x8 (கூட்டுறவு ஊழியர்களுக்கு வழங்கப்படும் விசேடபடிகளும் வழங்கப்படும்)

கல்வித் தகைமைகள்:–

(1) மேல்மட்ட முகாமை / மேற்பார்வைத் தரத்தில் கூட்டுறவு வேலையாளர் 9வது சம்பளத்திட்டத்தில் மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது மேற்சொன்ன கூட்டுறவு வேலையாளர் 10வது சம்பளத்திட்டத்தில் ஆறு வருடத்துக்குக் குறையாத அனுபவம் அல்லது

(2) அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையில் பட்டம் பெற்றவர். அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகத் தொழில் நிறுவனத்தில் மேல்மட்ட முகாமைத்துவ பதவியில் இரு வருடத்துக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் தராதரப்பத்திரம் (உயர் பிரிவு) க. பொ. த (உயர்தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத் தொழில் ஸ்தாபனமொன்றில் மேல்மட்ட முகாமைத்துவ பதவியில் 4 வருட அனுபவம்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் 31–08–87ந் திகதிக்கு முன்னர் மேற்படி சங்கத்தின் தலைவருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவேண்டும். மேலும் விபரங்கள் தேவைப்படின் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்
புதுக்குடியிருப்பு ப. நோ. கூ. சங்கம்

# ‘ரே’ அதிகாரி---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

திருந்தன.

இந்திய அரசுப்பிரதிநிதிகளுக்கும் போராளிகளுக்கும் இடையே நடந்த பேச்சுக்களின் முக்கிய விவரங்கள் வெளியானதைத் தொடர்ந்தே இவர் மீது சந்தேகம் ஏற்பட்டது.

இப்பேச்சுக்கள் பற்றி அவர் அமெரிக்க ஏஜன்ஸி ஒன்றுக்குத் தகவல் தெரிவித்தார் என்றும் அதனால் இந்தியாவின் நலன சிறிதளவு பாதிக்கப்பட்டது என்றும் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடும் கண்காணிப்பு நடவடிக்கையின் பின்னர் திரு. உன்னிக்கிருஷ்ணன் மீதான சந்தேகம் நிரூபிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அவர் சென்னையில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டார்.

ஆரம்பத்தில் முரண்டு பிடித்தாலும் பின்னர் தனது நடவடிக்கைகள் பற்றி, விசாரணையாளர்களிடம் அவர் விவரமாகத் தெரிவித்தார் அதைத் தொடர்ந்து இப்போது அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்.

போராளி இயக்கங்களுக்கு இடையே பிளவு ஏற்படுத்தும் விதத்திலும் இவர் நடந்து கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர் கொழும்பு இந்தியத் தூதரகத்தில் பணியாற்றியபோது தான் வெளிநாட்டு ஏஜன்சிகளுடன் தொடர்பு கொள்ளத் தொடங்கினாரா என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. (உ–எ)

# தமிழ் மாநிலம்------

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உதயனில் வெளியானது வாசகர்கள் அறிந்ததே.

கொள்கையளவில் உதவுவது என்று இந்தியா தீர்மானித்து உள்ளது. அதுபற்றியதிட்டம் எதையும் இந்தியா இன்னு தயாரிக்கவில்லை மதிப்பீடு எதையும் மேற்கொள்ளவில்லை – இப்படி அந்தபேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

மாநில சபை இயங்கத் தொடங்கிய பின்னர் உதவி வழங்கப்படும் என்றஇந்திய நிலைப்பாட்டின் காரணமாகத் தான் நிதி அமைச்சர் ரொனி டிமெல் தனதுபுதுடில்லிப் பயணத்தை வரவு செலவுத் திட்ட வாதத்தின் பின்னர் மேற்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றார். என்று இலங்கை அரசு வட்டாரங்களில் இருந்து அறியவந்தது. (அ–எ)

## கூட்டம்

வடமராட்சியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் முழுமையாக சேதமுற்றுள்ள உடுப்பிட்டி மகளிர் கல்லூரி புனரமைப்பது பற்றி ஆராய்வதற்கான [illegible] கல்லூரி [illegible] இன்று காலை [illegible] யில் நடை[illegible]

# ஒப்பந்தத்தில்..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)


32, மட்டக்களப்பில் 24 முகாம்கள் இயங்கி வருகின்றன.

அங்கு ரோந்து புரியும் இராணுவம் பொதுமக்களை அநியாயமாகத் தாக்கி, மிரட்டி, சோதனையிட்டு வருகின்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக கிழக்கில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்களை ஸ்ரீ லங்கா அரசு இப்பொழுதும் மேற்கொண்டுவருகிறது.

இத்தகைய பதற்றமான நிலைகளினால் இடம்பெயர்ந்த தமிழர்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பமுடியாத ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கின்றது—இப்படி [illegible]ஞர்.

நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு
உதயன் நடத்தும்
அதிர்ஷ்டப் பயணப் போட்டி



பெயர் ______
முகவரி ______

நல்லூர் கந்தன் ஆலயத்தில் மணிக்கோபுரங்கள் எத்தனை?
உதயன் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
நல்லூரை வழிபட்ட இரு ஈழத்துச் சித்தர்கள் யாவர்?
சஞ்சீவி வார இதழின் இலட்சிய வாசகம் என்ன?

[illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பட்[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org